விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARA-MALAR

மலர் 26 சித்திரை 17 றஜப் 26 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 29—4—84 இதழ் 74

## யாழ்: நகரில் மீண்டும் சுவரொட்டிகள்!

(யாழ்ப்பாணம்)
நீண்டகாலத்தின் பின்னர் யாழ். நகரில் மீண்டும், புதிய சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

பிரதானவீதி, பஸ் நிலையம், பெரிய கடை மற்றும் பல பகுதிகளில் இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இரு இயக்கங்கள் பற்றி ஒரு சுவரொட்டியிலும், யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதம் பற்றி மற்ற சுவரொட்டியிலும் வாசகங்கள் காணப்படுகின்றன.

மக்கள் குழுமிநின்று இச்சுவரொட்டிகளைப் பார்வையிட்டனர். (க)

# யாழ்ப் பாணத்தில் மேதினக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடக்காது!

## பொலிஸ் அனுமதி கிடைக்கவில்லை!

(க. யோகநாதன்)

யாழ்ப்பாணத்தில் நாளை மறுதினம் மேதினப் பொதுக்கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடைபெறமாட்டாது. மேதின ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களை யாழ்ப்பாணத்தில் நடாத்த பொலிசாரின் அனுமதி கிடைக்கவில்லை.

யாழ் திறந்த வெளி அரங்கில் ஐக்கிய மேதினக்கூட்டத்தை நடாத்த வடபகுதி தொழிற்சங்கங்கள் பொலிசாரிடம் அனுமதி கோரியிருந்தன. யாழ் நகரமண்டபத்தில் மேதினக்கூட்டத்தை நடாத்த இலங்கை கம்யூனிஸ்ட் இடதுசாரிகளும், பொலிசாரிடம் அனுமதி கோரியிருந்தது.

பொலிசார் இவ்விரு கூட்டங்களுக்கும் அனுமதி வழங்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் மேதின பொதுக்கூட்டங்கள் ஊர்வலங்களை நடாத்த பொலிசார் அனுமதி வழங்கவில்லை என யாழ். பொலிஸ் அதிபர் திரு. டீ. ஈ. ஆனந்தராசா நேற்றுத் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான தொழிற்சங்கங்கள் தற்போதுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் மேதின கொண்டாட்டங்களை நடாத்துவதில்லை என்று ஏற்கனவே முடிவுசெய்துள்ளன. (க)

## திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)
நேற்று மாலை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள புதர்கள் நிறைந்த பகுதியில் திடீர் இராணுவ சோதனை இடம்பெற்றது. நீண்டநேரமாக இச்சோதனை இடம்பெற்றது. (செ)

## மல்லாகத்தில் சிறிது நேரம் பரபரப்பு
## மோட்டார் சைக்கிள் இளைஞர் தப்பி ஓட்டம்!

(மாவிட்டபுரம்)
கன்னுவம்-மல்லாகம் பகுதியில் நேற்று நண்பகல் ஏற்பட்ட துப்பாக்கி வேட்டு சம்பவத்தையடுத்து சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வீதியில் வந்த இரு இளைஞர்களை ஆயுதப்படையினர் தாக்கிய தையடுத்தே இந்தப் பரபரப்பு நிலவியது.

(16ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மக்கள் வங்கியில் கொள்ளைபோன நகைகளுக்கு நஷ்டஈடு கிடைக்கிறது

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மக்கள் வங்கியில் நகைகள் அடைவு வைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட நகைகளிற்கான நஷ்டஈடு வழங்குதல் கடந்த இரு வாரங்களாக நடைபெற்றுவருகிறது.

கிளிநொச்சி நகை அடைவு வைப்போர் பாதுகாப்புச்சங்க நிர்வாகிகளான கே. பாக்கியநேசர், என். இராமநாதன், என். சோதிநாதன். திரு. செல்லையா ஆகியோர் அமைச்சர் திரு எஸ். தொண்டமானுடன் தொடர்புகொண்டு எடுத்த முயற்சியின் பலனாகவே நஷ்டஈட்டை வழங்க அரசு முன்வந்தது.

நஷ்டஈட்டை வழங்கியதற்காக கிளிநொச்சி நகை அடைவு வைப்போர் பாதுகாப்புச் சங்க நிர்வாகிகள் அமைச்சர்கள் எஸ் தொண்டமான் ரொனி டி மெல், மக்கள் வங்கி அதிகாரிகள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து மகஜர் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர்.

## தொழிற்சங்கங்கள் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)
சுமார் அரை நூற்றாண்டு காலமாக இலங்கை தொழிலாளி வர்க்கம் மேதினத்தைக் கொண்டாடி வந்துள்ளது ஆனால் இவ்வருடம் அரசநாட்டின் பாதுகாப்பை காரணங்காட்டி யாழ். மாவட்டத்தில் ஊர்வலங்களை மட்டுமல்ல, பொதுக்கூட்டங்களை கூட தடை செய்துள்ளது யாழ். மாவட்டத்தில் ஐக்கிய மேதினத்தை கொண்டாட முடிவு செய்த வடபகுதி தொழிற்சங்கங்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்க பொது சேவை தொழிற்சங்க சம்மேளனம் தபாலக தொழிற்சங்கம், ஸ்ரீ லங்கா தபால்-தந்தி சேவையாளர் சங்கம் ஆகியன நேற்று கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

அந்த அறிக்கையில் மேதின ஊர்வலங்கள் பொதுக்கூட்டங்கள் தடை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் ஏனைய பகுதிகளிலுள்ள தொழிலாளருடன் அணிதிரண்டு போராடுவோமென்றும் தெரிவித்துள்ளன.

## வடபகுதி சம்பவங்களை கண்டித்து
## 'அமிர்' நாடு திரும்பியதும் யாழ் நகரில் உண்ணாவிரதம்!
### கூட்டணி நிர்வாக செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களை கண்டித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒருநாள் உண்ணாவிரதம் இருக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாக கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் திரு எம். ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதம் முதலில், யாழ்ப்பாணத்திலும், அதைத் தொடர்ந்து, மட்டக்களப்பு, மன்னார், திருகோ. வவுனியா, முல்லைத்தீவு கிளிநொச்சி மற்றும் இடங்களிலும் நடைபெறுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ். பிரஜைகள் குழு, மற்றும் பொது நிறுவனங்கள் பலவும் பங்குபற்றுமென்றும் தெரிவித்தார்.

கூட்டணி செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் நாடு திரும்பியதும், இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படுமெனவும் உண்ணாவிரதத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் உண்ணாவிரதத்திற்கான தேதி பற்றி இன்னும் ...


## சவுதி அரேபியாவில் வேலைவாய்ப்பு

| | | |
|---|---|---|
| மேசன்மார் | - 50 - | SR. 850-00 |
| தச்சுத் தொழிலாளர் (SHUTTERINGS) | - 20 - | SR. 850-00 |
| தச்சுத்தொழிலாளர் (FURNISHING) | - 20 - | SR. 850-00 |
| இலக்ரீஷியன்மார் (INDUSTRIAL) | - 20 - | SR. 900 00 |
| இலக்ரீஷியன்மார் (DOMESTIC) | - 20 - | SR. 800-00 |
| குழாய் இணைப்புமார் (PLUMBERS) | - 30 - | SR. 850-00 |
| பார்பென்டன்மார் (BAR BENDERS) | - 30 - | SR. 850-00 |
| கனரக சாரதிகள் | - 50 - | SR. 900-00 |

பாஸ்போர்ட் 3 போட்டோ பிரதி, கல்வி அறிவு, வேலை அனுபவ பத்திரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

INTER TRADE AGENCIES
23, Aloe Avenue, Colombo-3.

MR. P. V. SRIVAIKUNTHAN,
VISVAM'S PHARMACY, SANDILIPAY.

சண்டிலிப்பாயில் மே 4, 5, 6-ம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.
எங்கள் சேவை இலவசம்.

தொழில் அனுமதி இல. 199
FB / 6 / FEA / 181 / 4581 (2046)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சொக்குவில் K. K. S. வீதி 3-ம் கட்டையில் 3 1/4 பரப்பு காணி கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு. திருமதி இ. ஞானம். கல் ஆரி ஒழுங்கை, மாவிட்டபுரம். 2029

நாகர்குளத்திற்கு அண்மையிலும் கண்டி பிரதான வீதிக்கருகில் வீடு கிணறுடன் கூடிய, வசதியான 30 ஏக்கர் நெல், மேட்டுநிலப் பயிர்செய்யக்கூடிய நிலம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விளம்பர இலக்கம் 2065, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2065

கோப்பாய் நாவற்குழிக்கு அண்மையில் நல்ல தோட்டக் காணி வீடும் கட்டக் கூடியதாக பத்துப் பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: M. பரஞ்சோதி, V. C. லேன், கோப்பாய் தெற்கு. 2068

நாவற்குழி கோதிவு ரோட் 25 யார் தூரத்தில் [illegible] பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரத்திற்கு: இ. கனகரெத்தினம், செம்பாட்டுத் தோட்டம், நாவற்குழி. 2061

நல்ல நிலைமையிலுள்ள 8 Sri மொறிஸ் ஒக்ஸ்போர்ட் கார் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: திருமதி சோமசுந்தரம், பிரசாந்தி, மலானி ரோட், கோண்டாவில். போன்: 22028. (2054)

5ம் கட்டையடி இல. 116/1 ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் பட்டினத்தில் உள்ள 4 பரப்புடன் சகல வசதியுள்ள வீடு விற்பனைக்குண்டு. 2053

நாவற்குழியில் கண்டி வீதிக்கு அருகாமையில் 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொழிற்சாலை அமைக்கக்கூடியது. தொடர்பு: S. அரியரத்தினம், மானிப்பாய், தெல்லிப்பளை அல்லது Dr. V. P. இந்திரநாதன், கண்டி வீதி, சாவகச்சேரி. 1748

பத்துப் போத்தல் கறக்கும் பசு ஒன்று விற்பனைக்குண்டு. இரண்டு வயசு. இரண்டாம் ஈற்று. இலந்தைக்காவிக் கன்றுடன். மணியகோ, மல்லாகம். 2069

ஒன்றரை பரப்பு வீடு கட்டும் காணி நல்லூரில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 251, பருத்தித்துறை வீதி, நல்லூர். போன்: 23348. (2074)

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பில் 6 ஏக்கர் கட்டை வன்தரை வயல் விற்பனைக்கு உண்டு. விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 2067. C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2067

நல்ல நிலையிலுள்ள 86 Sri 8 கொடரிக் உள்ள C T O 110 KAWASAKI மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: P. KONES காணியூர் ரோட், உரும்பிராய். 2048

உரும்பிராய் சந்தியில் 4 பரப்பு காணியும், கைதடி நுணாவில் ரயில் தொழிற்சாலைக்கு அருகாமையில் 20 பரப்பு வீடு/தொழிற்சாலை கட்டக்கூடிய காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சண்முகநாதன், உ. [illegible] [illegible] [illegible] நாதன் திருநெல்வேலி சந்தி. 2038

## விற்பனைக்கு

Bairaha Farms Hisex வெள்ளை, பிறவுன் ஒருநாள், ஒருவார, ஒருமாதப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, சொக்குவில். 1987

வீட்டுப்பாவனைக்கு அல்லது ரெஸ்ரோரண்ட் BARக்கு உகந்த ஸ்டீரியோ மியூசிக் செட் - நாஷனல் டேப் டெக், அம்பிளிபையர் 8+8W, ரெக்கோர்ட் பிளேயர் பயனியர் ஸ்பீக்கர்கள் 80 W - விற்பனைக்குண்டு. கோசலம் 87/2 மேற்கு ஒழுங்கை, மாகடன் வீதி. 2020

### தேவை

தோட்டக்காணி அல்லது திருத்தி எடுக்கக்கூடிய பெரிய நிலப்பரப்பு யாழ். நகருக்கு அருகாமையில் அல்லது சுமார் 7 மைலுக்கு உட்பட்டதாக உடனே தேவை. பரப்பளவு இடம் - எதிர்பார்க்கும் விலை குறிப்பிட்டு எழுதவும். மா, பலா, புளி முதலிய பெரும் விருட்சங்கள் செழித்து வளரக்கூடிய காணியும் தேவைப்படுகிறது. எவ்விதகாணியாயினும் 25 பரப்புக்கு மேலாகும் வெளி நாட்டிலும் விண்ணப்பிக்கவும். த. பெ. 393 கொழும்பு. 189[illegible]

அலுமினிய உருக்குத் தொழிற்சாலைக்கு வார்ப்பு வேலையிலும், மினுக்கு வேலையிலும் (Polishing) அனுபவமுடையோர் உடன் தேவை. வேலைநாட்களில் நேரில் சமூகமளிக்கவும். ஜோசப் இண்டஸ்ரீஸ், குமாரசாமி புளைரோட், கொத்தியாலடி, சுன்னாகம். 2056

G. C. E. (O/L) வகுப்பு படிக்கும் மாணவிக்கு விஞ்ஞான பாடம் கற்பிப்பதற்கு (Tuition) யாழ் மாநகர எல்லைக்குள் வசிக்கும் தகமையுள்ள ஆசிரியர் ஒருவர் தேவை. விபரங்களுக்கு: வே. நடராசா, சங்கத்தானை தெற்குவீதி, [illegible] வீதி, யாழ்ப்பாணம். போன்: 23698, 22513. [2052]

ரெலிவிசன், வீடியோடெக், காற் உடன் வாங்கப்படும். Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். 2050

நல்ல நிலைமையிலுள்ள பேர்ஜோ 404 (Peugeot 404) கார் என்ஜின் தேவை. விலை குறிப்பிடவும்: எம். செல்வம், கோப், இல்லாவில், பண்டத்தரிப்பு. 2044

பிணைப்பணம் செலுத்தக் கூடிய புகுதி காசாளராக கடமையாற்றுவதற்கு தேவை. மாநகரசபையெல்லைக்குள் விரும்பத்தக்கது. அத்துடன் தமிழ் சிங்கள மொழி தெரிந்த யுவதிகள் தேவை. தாஸ் ஸ்ருடியோ 9, 8, நவீன சந்தை யாழ்ப்பாணம். போன் 23858 1984

### சேவை

மணமக்கள்தேவையா? சகல இன, மத, குலத்திலும் உள்ளனர். உங்கள் தேவைகள் உடனடியாக பூர்த்தி செய்யப்படும். விபரங்கட்கு F [illegible] நான்சியல் அசோசியேசன் 402 1/2 K.K.S வீதி, யாழ்ப்பாணம் (பெல் கோவிலடி) 1958

காணிகள், தளபாடங்கள், தங்கநகை இயந்திரங்கள் விற்பதற்கு, வாங்குவதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் Financial Association 402 1/2 K K.S Road Jaffna. (பெல் கோவிலடி) 1954

### வாடகைக்கு

மாநகர எல்லைக்குள் நவீன வசதிகளுடன் கூடிய வீடு இருவருக்கு வாடகைக்கு உண்டு திருமதி சோமபால, 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22885. [2043]

### பயிற்சி

Computer programming, ரெலிவிசன் - வீடியோ டெக் திருத்துதல், படவரைஞர் பயிற்சி, வயறிங், வெல்டிங், Hotel Management ஆரம்பம்; 05-05-84 Jaffna Technical Institute 52/1 ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். 1992

### கல்வி

எமது "அஞ்சல்வழி ஆங்கிலம்" கல்விச்சேவை மூலம் வீட்டில் இருந்தபடியே சிறந்தமுறையில் விரைவாகவும் மிக இலகுவாகவும் ஆங்கிலம் கற்கலாம். விபரங்களுக்கு "மதிசேவிசஸ்" 87 [651] கஸ்தூரியார் வீதி, [வெலிங்டன் தியேட்டர் சந்தி] யாழ்ப்பாணம் தொலைபேசி: 22762. [2076]

### சேவை

Service Station அமைக்க எண்ணும் முதலீட்டாளர்கள் கவுறுதி எம்முடன் தொடர்பு கொள்க. இத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் தரமாகவும், சிக்கனமாகவும், உங்கள் நிலையத்தை நிறுவித் தருவதோடு பெறுமதியான ஆலோசனைகளையும் வழங்குவர். விளம்பர இல:- 2068 3ம/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2068

### WANTED

Secretary-cum-Administrative Officer-cum-Stenographer with wide foreign experience for duty only in Northern Province, First class English. Salary negotiable. Contact; Advt. No. 2008, c/o Eelanadu, Jaffna. 2008

Wanted an experienced person in Plastic Welding/Embossing. Apply: Ramsons Inuvil Road, Mallipay. 2055

A newly opened leadin- vedeo library in Jaffna lookg ing for young energetic youths (Males, Females) with Eng ish knowled.e apply in own hand writting before 3rd of May 1984. advertising No 2066, c/o Eelanadu Ltd. Jaffna. 2066

### CLASSES

Have you finished your shorthand/typing course? If so come to me to qualify to be a supra grade. Confidential Secretary or stenographer or typist. Also a basic course in Spoken English Advt. No. 2009, c/o Eelanadu, Jaffna. 2009

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பகிரங்க ஏல விற்பனை

பல்கலைக்கழகத்தில் பாவனையிலிருந்த புகைப்படப் பிரதி எடுக்கும் இயந்திரம் (Photo Copying Machine, 'Canon' Model) 02-05-84 அன்று முற்பகல் 10-00 மணிக்கு பல்கலைக்கழக வளவினுள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றிபெறுவோர் மொத்தத் தொகையில் 50% த்தை உடனடியாகவும் மிகுதியை 04-05-84 க்கு முன்னதாக செலுத்திய பின்னரும் இயந்திரத்தை அப்புறப்படுத்தலாம்.

பதிவாளர்

2027

## Modern Education Centre

KARAVEDDY

புதிய வகுப்புகள்:

க. பொ. த (உயர்) 86 ஒகஸ்ட்

க. பொ. த (சாதார) 84 டிசம்பர்

(பகல் நேர வகுப்பு)

ஆரம்பம் 29/04/1984 காலை 9 மணி

2057

## வீடியோ-மிகப் புதியதமிழ்படங்கள்

உண்மைகள், நூறாவதுநாள், சூரப்புலி, மண்வாசனை, நான் மகான் அல்ல (ரஜினி) கொல்லி மலை மாவீரன் (கமல்) யாவும் குறைந்தகப் பிரதிகள்

துர்க்காஸ், சுன்னாகம் (2058)

VACANCIES FOR

TINKERS, FITTERS AND WELDERS.

Reputed Engineering firm in Jaffna requires skill workers in the following trade with experience.

1. TINKER 2. FITTER

3. ELECTRIC WELDER

Apply to advt. no: 844, c/o Eelanadu Ltd. Jaffna.

## மலிவு விற்பனை

புத்தம் புதிய HONDA மோட்டார் சைக்கிள்

C G 125 CLASSIC

தற்போதைய விலை = 24,000/-

எமது விலை = 21,000/-

இரண்டு SIDE BAGS இலவசம்!

கையிருப்புக் குறைவு முந்துங்கள்

## மாருதி மோட்டார் கொம்பனி

மெயின் வீதி - பருத்தித்துறை

2076

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

செல்வி சுமதி சண்முகலிங்கம்

கந்தர்மடம்



மலர்வு: 26-12-63 உதிர்வு: 3-4-84

கடந்த 3-4-84 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புச் செல்வம் செல்வி சுமதி அவர்களின் இறுதிக் கிரியைகளிலும் அவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருந்தபொழுது அவருக்கு வேண்டிய உதவிகளைச்செய்து உதவிய வைத்திய நிபுணர்கள், அதிகாரிகள், தாதிமார், இரத்த தானம் செய்தவர்கள், அன்பர்கள், உதவிபுரிந்த நல்லூர் இந்து தமிழ்ப் பெண் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊரவர், உறவினர், நண்பர்கள், மலர் வளையங்களும், அனுதாபச் செய்திகளும் அனுப்பியவர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 29-4-84 ஞாயிறு காலை கிரியைகளிலும், 3-5-84 இல் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணத்திலும் கலந்துகொண்டு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் அன்பு அப்பா, அம்மா, அக்கா, அத்தான், சகோதரர், சகோதரிகள், மாமா, மாமி, பெரியம்மாமார், சித்திமார்.

பிரசாந்தி, 38, பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

2075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

இயற்கையின் சுகப் பிரசவம் காலைப்பொழுது ஆனால் முத்தம்மாவுக்கோ அது வெறும் வேதனைப் பொழுதாக அமைந்துவிட்டது. இரவுப் பொழுது இன்னமும் நீண்டு கொண்டே இருக்கக்கூடாதா? என்ற மன ஆதங்கத்தோடு தான் முத்தம்மா சோம்பிக் கிடந்தாள்.

''அம்மா' என்னாலை இண்டைக்குப் பள்ளிக்குடம் போக ஏலாது, நான் நிக்கப்போறன்''—ஒன்பதாம் வகுப்பைப் பல சிரமங்களுக்கு மத்தியில் எட்டிப்பிடித்துவிட்ட சுதர்சனின் விண்ணப்பம் இது.

''அம்மா! இண்டைக்குக் கொப்பி இல்லாமல் போனால் வாத்தியார் வெளியிலை பிடிச்சு விட்டிடுவார். கொப்பிக்குக் காசு தந்தால்தான் நானும் பள்ளிக்குடம்...'' வார்த்தைகளை முடிக்காமலே இழுத்துக் கொண்டிருந்தாள் சுதாகினி.

இரண்டு பிள்ளைகளின் கோரிக்கைகளையும் என்னவென்று செவி கொடுத்துக் கேட்கவிடாது மூன்றாவது பிள்ளை சபேசன் ''அம்மா பசிக்குது... அம்மா பசிக்குது நான் இராத்திரியும் ஒண்டும் தின்னேல்லையெல்லே... என்னண்டாலும் தா'' என்று அடம் பிடித்து அழுது கொண்டிருந்தான்.

இத்தனைக்கும் கடைக் குட்டி ரேவதியோ முத்தம்மாவின் மார்பைச் சப்பிப் பால் வராத ஏமாற்றத்தால் அவளின் முகத்தையும் மார்பையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டாள்.

முத்தம்மாவின் இத்தர்ம சங்கடமான நிலையில் காலைப் பொழுது விடிந்திருக்கக் கூடாதுதான். என்னசெய்வது. வாழ்க்கையில் விடிவற்றவர்களுக்காக இயற்கையின் விடிவு தாமதித்து விடுமா என்ன?

''அப்பா வெள்ளணையே வெளிக்கிட்டிட்டார். ஏதாச்சும் அகப்பட்டால் நேரத்தோடை வந்திடுவார். அவர் வரும் வரைக்கும் உங்களுக்கு நான் என்னத்தைச் சொல்லி என்ன...ம்...'' முத்தம்மா தன் மனச் சுமை நிறைந்த வார்த்தைகளோடு ஏதேதோவெல்லாம் சொல்லிக் கண்ணீர் விட்டாள் பிள்ளைகளின் தேவைகளை ஈடு செய்ய முடியாத தாய்க்குக் கண்ணீரை விட்டால் வேறு வழி?

'ஏ பணமே! நீஏன்இப்படியெல்லாம் உலகைஆட்டிப் படைக்கின்றாய் வலுவுடையோரின் விளையாட்டுப் பொருளாயிருக்கும் நீஏன் இப்படிஇல்லாரை மட்டும்நடைப்பிணங்களாக ஆக்கிப்போடுகிறாய்'—இப்படியெல்லாம் முத்தம்மாவின் மனம்சதாகேட்டுக்கேட்டு முடிவின்றித்தவித்து வாழ்க்கையின் முடிவிற்கே சென்று விட நினைத்திருந்தாள், ஆனால் இந்தக் குழந்தைகளை விட்டு விட்டு அவள்மட்டும் அப்படியான முடிவை நாடிவிட்டால்... பஞ்சப் பீழையில் வீழ்ந்துகிடக்கும் சின்னஞ்சிறிசுகளின் நிலை...ஓ... அதுகள் என்னசெய்து விடப் போகின்றன. முத்தம்மாவின் சிந்தனை முடிவுகளற்றுநீண்டுகொண்டே இருக்கிறது.

'வெளிநாட்டு வேலைவாய்ப்புகளால் உள்ளூரில் தொழிலாளருக்குக் கிராக்கிஏற்பட்டிருக்கிறது; நல்லசம்பளமும் கிடைக்கிறது, என்றுபெரிய மட்டங்களில் மேடைகளில் எல்லாம் பேசித்திரிகிறார்களே ... நாங்கள் தொழில்கிடைக்காமல் அலைகின்ற அலைச்சலும் துன்பங்களும் எங்களுக்கல்லவோ தெரியும். பேசிப்போட்டுப் போகிறவனுக்கென்ன பேச்சுக்காகப் பேசுபவர்கள் தானேஇவர்களெல்லாம். அணுவணுவாகத் துடி துடித்துப் போராடிக் கொண்டிருக்கும் தொழிலாளரின் நிலை...... அது அனுபவிப்பவனுக்குத் தான்தெரியும். வேலைத்தலங்களிலெல்லாம் முகவர்களாக இருப்பவர்கள் தொழில்கோரிச் செல்லும் தொழிலாளிக்கு கோழிக்குப்பால் கொடுத்த கதையாக, இன்றுவா..... நாளைவா, ஆள்போதும்...... அப்பிடி இப்பிடி எத்தனையோ சாக்குப்போக்குகளைச் சொல்லி ஐந்தோபத்தோ வாங்கும்நிலையில் தொழிலாளியைத் தொழிலாளியே சுரண்டும் போது..... சே......... என்ன வாழ்கைஇது'—மனச்சலிப்போடு எங்கோகுறிவைத்தவனாகச் சென்றுகொண்டிருந்




தான் சண்முகம். நேற்றிரவு படுக்கப்போகும்வரை காத்திருந்து பிள்ளைகள்சொன்னதையே அவன்மனம் அசைபோட்டுப்பார்த்துக் கொண்டு இருந்தது.

''அப்பாவகுப்பில் எல்லோரும் கொப்பிவாங்கிப் போட்டினம். நான்தான்இன்னும் வாங்கவில்லை. திங்கட்கிழமை கொப்பியில்லாமல் வரவேண்டாமென்று வாத்தியார் செல்லிப்போட்டார்—' சுதர்சினியின் குரல்இது.

''நான்பள்ளிக்குப் போகாமல் விடப்போறனப்பா. ஒவ்வொருநாளும் பட்டினியோடுபோய்க் கொட்டாவி கொட்டாவியாகவிட்டுக் கொண்டிருக்கப் பெடியள் பகிடிபண்ணுறாங்கள். மூன்றுமணிக்குத் திரும்பி வருவதற்கிடையில் எனக்கு மயக்கமே வந்துவிடுகிறது. இப்பிடியே பசியோடைபடிக்கப் போறதிலும் நானும் உங்களோடை வேலைக்குவாறன். தங்கச்சியையும் தம்பியையும் வடிவாப்படிப்பிப்பம்'' - இது பொறுப்புணர்ந்த சுதர்சனின் வேதனைக்குரல்.

அந்தக்குரல்களிரண்டும் சம்மட்டிகளாகி சண்முகத்தின் நெஞ்சில் பலமாக அடித்துக் கொண்டேஇருக்க, அவன் நடந்துகொண்டே இருந்தான். [illegible] எத்தனை [illegible] போராட்டங்கள்.

'ஒன்பதாம்வகுப்பு வரை வந்துவிட்ட மூத்தவனை இன்னும்ஒரு மூண்டு வருசம்கஸ்ட்டப்பட்டும் பத்தாம்வகுப்பைத்தாண்டச்செய்து போட்டால் ஆற்றையேன் காலைப் பிடிச்சுக்கையைப்பிடிச் செண்டாலும் ஒருநிரந்தரத் தொழிலுக்கை விட்டிடலாம். பிறகு பிள்ளை சுதர்சினியையும் ஒரு மாதிரிப்படிப்பிச்சுப் போடலாம்......''

சண்முகம் சிந்தனைகலைந்த போது அந்தவிறகுகாலையை அடைந்துவிட்டான். அவன் வந்துவிட்டபோது மென்ன இன்னும் விறகுகாலைமுதலாளி வந்தபாடில்லை.காலைப்பொழுது வேகமாகஓடிக் கொண்டிருந்தது பொழுது ஏற ஏற, சண்முகத்தின் துயரமும் ஏறிக் கொண்டேயிருந்தது.

அதோ... ஆம்... காலைமுதலாளி நடேசபிள்ளை தான் சயிக்கிளில்வந்து கொண்டிருந்தார். சண்முகம் முகமெல்லாம் பல்லாகச்சிரித்தான். ஏழ்மையைப் போக்கிவிட ஏழைகள் தீட்டும் முகவுரை சிரிப்பொன்றுதானே!

''என்ன! சண்முகம் விடியுது விடியமுன்னம் இண்டைக்கு வந்து நிக்கிறாய், என்ன சங்கதி? வீட்டிலைகரைச்சலாக்கும். என்ன? இல்லாட்டில் அருவிவெட்ட அது இது என்று போயிடுவாய்.... ஏன் இண்டைக்கு வேறவேலை யொண்டும் அகப்பிடேல்லையோ''- கேலியும் கிண்டலுமாக முதலாளி நடேசபிள்ளை பேசிக் கொண்டார்.

உலகின் உழைப்பாளிகளிலெல்லாம் தங்கி இருக்கும் முதலாளிகளின் வாடிக்கை வார்த்தைகள் இவைதானே என்பதை அறியாதவனல்ல, சண்முகம். என்னசெய்வது.... வறுமை, தேவை இரண்டும் ஒன்றுகிவிரட்டியடிக்கும் போது... சண்முகம் மௌனியாகி, கருணை கிடைக்குமா என்ற ஏக்கத்தில் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றான்.

''சண்முகம் இஞ்சை கொத்தின விறகு கனக்கக் கிடக்குது இப்போதைக்குக் கொத்தத் தேவையில்லை,,—நடேசபிள்ளையின் பதில் நாராசமாகச் சண்முகத்தின் செவிகளில் பாய்ந்தது...

பட்டினித்துயரம்... தேவைகள்... பிள்ளைகளின் பிரலாபங்கள்... எல்லாம் ஒன்றுகிப் படையெடுத்துச் சண்முகத்தின் நெஞ்சைச் சுட்டெரிக்கின்றன. ஒருவாரமாக ஒரு வேளை அரைவேளை யென்றும் கஞ்சித் தண்ணியோடும் இராப்பட்டினி பகல் பட்டினி என்று கிடக்கும் என் செல்வங்களை... இனிமேலும் கிடக்க விடத்தான் வேணுமா? துயரச் செக்கினுள் நசியும் எள்ளாகச் சண்முகம் நின்று இருந்தான்.

''முதலாளி... என்னைக் கைவிட்டிடாதீங்க, எப்படியாவது வேலை கொடுங்க அதுக்கு முந்தி ஒரு இருபது ரூபா கொடுங்க... வீட்டை குடுத்திட்டு வந்து வேலை செய்யிறன்,'—கண்ணீர் வெளிப்பாடு தெரியவில்லையேயொழிய சண்முகத்தின் நெஞ்சில் ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

''ஓ.. நீ வேலை வேணுமெண்டதுக்கே நான் யோசிக்க வேண்டியிருக்கு.அதிலை வேறை முற்பணமும் கேட்கிறாய் வேலை செய்தமாதிரிஇஞ்சை ஒழுங்கா வேலை செய்திருந்தால் பறுவாயில்லை அங்கை சம்பளங்கூட இஞ்சைகூட என்று நாயா அலையிறது... கடைசியிலை ஒண்டுமில்லாட்டில் இங்கை வந்து பட்டினிக் குரல் காட்டுவாய். போ...போ இப்ப என்னட்டைக் காசில்லை. ஆரும் விறகுக்கு வந்தால் பார்ப்போம் காசை நாங்கள் என்ன கட்டிக்கொண்டா திரியிறம்'' —முதலாளி நடேசபிள்ளையின் வறட்டு வார்த்தைகள் தெறித்துச் சிதறின.

''மற்ற விறகுகாலைக்காரன்களெல்லாம் தூக்குக்கு நாலு ரூபா வீதம் கொத்துக்கூலி கொடுக்கும்போது இரண்டு ரூபாவிற்குக் கொத்த மறுத்துச் சென்ற சண்முகம்... அன்று தான் கேட்ட நியாயமான கூலிக்கு ஒத்துவராத நடேசபிள்ளையின் பழைய பழி வாங்கலை இப்போது எண்ணத் தவறவில்லை. முதலாளியென்றால் யானைப்பிறவிகள்தானே''—சண்முகம் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

''என்ன சண்முகம் யோசனை நாட்கூலி நாற்பது ரூபா தாறன் கொத்துவியா?''

இப்போது மற்றவர்கள் தூக்குக்கு ஐந்து ரூபா கொடுப்பதால் நாட்கூலிக்கே கொத்துவிக்கும் நடேசபிள்ளையின் வறட்டுப் புத்தியை எண்ணி மனதுள் நச்சரித்துக்கொண்டே சம்மதித்தான் சண்முகம்.

நாலுமணிவரை முதலாளி காட்டிய அத்தனைகுத்திகளையும் சண்முகம் கொத்தி முடித்துவிட்டான்.

நடேசபிள்ளை முதலாளி சிரித்துக் கொண்டே நாலு பத்து ரூபா நோட்டுக்களைசண்முகத்திடம் நீட்டுகிறார் ''தேத்தண்ணியும் நியாயமான கூலியும் சாப்பாடும்.... இப்பிடிக் கொத்திறதெண்டால் நீ இஞ்சை நெடுகக்கொத்திப் பிழைக்கலாம் தானேசண்முகம்..... என்ன'' என்றுநடேசபிள்ளை சொன்னார்.

நிறைக்கணக்கில் கொத்துவதென்றால் கூலி இன்னும் கூடிஇருக்கும் என்பதை நடேசபிள்ளை அறியாதவரா என்ன. சண்முகம் கடவுளைக்கண்டபக்தனைப்போல் அந்தப்பணத்தோடு ஓட்டமும் நடையுமாகச்சென்றான்.

வீடுவெறிச்சோடிக் கிடந்தது.

முத்து... முத்து... சுதர்சினி.. எங்கேயாரையும் காணேமே. குடிசையினுள் சென்றுபார்த்து விட்டு வெளியேவந்தபோது சண்முகத்தின் கண்களில்... ஓ... என்ன இது கடிதம் ஒண்டு செருகிக்கிடக்குது... அவசர அவசரமாகப் பிரித்தான் சண்முகம்.

''அப்பா! அன்றாடங்காய்ச்சிகளான எங்களுக்கு உழைப் பொன்றே மூலதனம் என்று

(12ம் பக்கம் பார்க்க)

## இவர்கள் ஏன் வீண் பொழுது போக்குகிறார்?

பனைமரத்தின் கீழிருந்து பால் குடித்தேன்
பார்த்தவர்கள் முகம் சுளித்தார்; குடியன் என்றார்
எனை மறந்தென் பாடலினை இசைத்து நின்றேன்
'இவனுக்கு விசர்' என்றே இயம்பி நின்றார்.

நான் வணங்கும் தேவியவள் பாதமீதில்
நாள் பொழுதாய் நான்பொழுது போக்கிநின்றேன்
ஏன் இவனுக் கொருதொழிலும் இலையோ இங்கு
வெறும்பொழுது போக்குகிறான் என்றுரைத்தார்.

அளவுடனே செலவிட்டேன்; எளிமையாக
வாழுவதே நலம்என்ற காரணத்தால்
இளகாத நெஞ்சன் என்றார்; கஞ்சன் என்றார்
'ஈச்சப்பி' என்றெல்லாம் ஏசிநின்றார்.

இல்லையென வந்தவர்க்குப் பொருளை வாரி
இல்லையென தென்கரத்தால் கொடுத்து வந்தேன்
பொல்லாத கள்வனிவன் இவனுக்கிந்தப்
பொருள்எல்லாம் வந்தவிதம் எவ்வாறென்றார்.

நான் கஞ்சன்; நான் கள்ளன் ஆனால் என்ன?
நான் குடியன், நான் விசரன் ஆனால் என்ன?
ஏன்இவர்கள் வேறுதொழில் இன்றி என்னை
விமர்சித்து வீண்பொழுது போக்குகின்றார்?

இவர்களுக்கோர் தீங்குதனை நான்செய் தேனோ?
என்பாட்டில் நான் வாழ்ந்தோர் நாளிற் சாவேன்
எவர்மீதும் குறையேதும் காணுவிட்டால்
'செமியாத' உலகம் இது அந்தோ பாவம்!!

■ கோப்பாய் எஸ். சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டுக் கோயில்கள் கலாசார நிலையங்கள்

தமிழ் மக்களது வாழ்க்கையில் கோயில்கள் மிக உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன. ''கோயில் இல்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்'' என்பது ஆன்றோர் வாக்கு. தமிழ் நாட்டில் சங்ககாலப் பகுதியிலேயே கோயில் வழிபாடு இடம்பெற்றதாக இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் பல்லவர் காலத்திலேயே கருங்கற் கோயில்கள் தோற்றம் பெற்றன. 1ம் மகேந்திரவர்மனால் வெளியிடப்பட்ட மண்டகப்பற்று சாசனம் ''மகேந்திரவர்மன் பிரமா' விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகளுக்கு மரம், செங்கல், மண், சாந்து முதலிய பொருட்களைப் பயன்படுத்தாமல்கோயில் கட்டினான்'' என்று கூறுகிறது. இதிலிருந்து மகேந்திரவர்மனது காலத்திலிருந்தே கருங்கற் கோயில்கள் தோற்றம் பெற்றமையை அறிய முடிகிறது. வரலாற்றாசிரியர்களும் ''திராவிடக் கட்டிடக் கலையின் தோற்றம் பல்லவர் காலம்'' என்று கூறுகின்றனர். இவ்வாறு பல்லவர் காலப் பகுதியில் தோற்றம் பெற்ற திராவிடக் கட்டிடக்கலை சோழர் காலப்பகுதியில் வளர்ச்சியடைந்து விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் நிறைவுத் தன்மையடைந்தது. இக்கோயில்கள் வழிபாட்டு நிலையங்களாக விளங்கியதுடன் மக்களது வாழ்வின் அனைத்து நிலைகளையும் தழுவிய கலை, பண்பாடு. நாகரிகத்தின் உறைவிடங்களாகவும் அமைந்துள்ளன. கல்விக்கும், கலைக்கும் கோயில்கள் பெருந்தொண்டாற்றி வந்துள்ளன. கோயில்களில் பல்வேறு மண்டபங்கள் தோற்றம் பெற்றன. நடன மண்டபம், நாடக மண்டபம், வியாக்கியான மண்டபம், தருக்க மண்டபம்' புராணபடன மண்டபம் போன்றன குறிப்பிடத்தக்கனவாகும். அவ்வவற்றில் கல்வியும், கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டன. கோயில் திறைசேரிகள் கழகத்திற்குத் தேவையான பணத்தை வட்டிக்குக் கொடுத்து வங்கி நிறுவனங்களாகவும் தொழிற்பட்டன. இவ்வாறு தமிழ்நாட்டுக் கோயில்கள் பண்பாட்டு நிலையங்களாக விளங்கின.

## கோயில்களும் கலைகளும்

கோயில்கள் பெருமளவிற்கு தோற்றம் பெற்றதுடன், கோயிற் கட்டிடக்கலையும் வளர்ச்சியடைந்தது. இக்கோவில்களை ஆதாரமாகக் கொண்டு சிற்பம், ஓவியம்' இசை, நடனம், நாடகம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்தன. கோயில்களில் வழிபாட்டிற்கு ஏற்ற வகையில் கடவுளர்களின் பல்வேறு தோற்றங்களையும் கற்கள் உலோகங்களில் வடித்துப் பிரதிஷ்டை செய்தனர். இத்தகைய சிற்பங்கள் கலைச்சிறப்புடையனவாகும். கோயிற் கோபுரங்கள், விமானங்கள், தூண்களிலும் பல்வேறுபுராண சம்பவங்களையும், தத்துவக் கருத்துக்களையும் உணர்த்தும் சிற்பங்கள் இடம்பெறுகின்றன. பல்லவர்கால சிற்பங்களில் மிகச்சிறந்தவை மாமல்லபுரம் சிற்பங்களாகும். நரசிம்மவர்மனால் அமைக்கப்பட்ட ரதங்களை ஒத்தமண்டபங்களையுடைய கோயில்களில் இராமாயணம், மகாபாரதக்கதைகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இராஜசிம்மனாற் கட்டப்பட்ட காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் சிவன் முப்புரங்களை எரித்தமை காலனை அழித்தமை, இராவணன் கைலயங்கிரியைப் பெயர்த்தமை போன்ற சம்பவங்கள் அழகிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. சோழர்கால சிற்பிகளின் கலைத்திறனை உணர்த்தவல்ல சிற்பங்கள் தஞ்சைப்பெருங்கோயில், கங்கைகொண்ட சோழபுரக்கோயில், திரிபுவனம் வீரேஸ்வரம் போன்றவற்றில் இடம்பெறுகின்றன. பிச்சாடணர் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், அர்த்தநாரீஸ்வரர், கலியாணசுந்தரர், மகிடாசுரமர்த்தனி, திருமால், பிரமன் போன்றோரது உருவத் திருமேனிகள் வனப்புமிக்கனவாகும்.

## இலக்கியச்சான்று

பண்டைத்தமிழர்களது கலைகளில் ஓவியக்கலையும் சிறப்புற்று இருந்தது. கோயில்களை நிலைக்களனாகக் கொண்டே ஓவியக்கலையும் வளர்ந்தது. சங்கஇலக்கியங்களில் ஒன்றான பரிபாடல் திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கு கோயில் இருந்ததாகக் கூறுகிறது. அக்கோயிலில் ஓவியக்காட்சிகள் இடம்பெற்றமையை அந்நூல் சிறப்பித்துக் கூறுகிறது. ''திருப்பரங்குன்றம் மலைமீது இருந்தகோயிலில் அழகியமண்டபம் ஒன்று காணப்பட்டது. அதில் ரதி, மன்மதன். அகலிகை. பூனை உருக்கொண்ட இந்திரன், கௌதமன் போன்றோரது உருவங்கள் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்தன'' என்றகுறிப்பைப் பரிபாடல் தருகிறது. பல்லவர் கால ஓவியக்கலைவளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் சித்தன்னவாசல் நடிகையர் ஓவியங்கள் உள்ளன. பல்லவமன்னர்களில் புகழ்பெற்றவனான மகேந்திரவர்மன் 'விசித்திரசித்தன்' 'சித்திரகாரப் புலி' போன்ற விருதுப்பெயர்களைப் பெற்றதிலிருந்து ஓவியக்கலையில் அவனுக்கிருந்த ஆர்வத்தை அறியமுடிகிறது. 'தக்ஷிணசித்திரம்' என்ற ஓவியநூலையும் மகேந்திரவர்மனே இயற்றினான் என்று கூறுவர். தஞ்சைப்பெருங்கோயிற் கருவறையின் பின்புறச்சுவர்களிலும் பல ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. இவற்றுள்சிவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சி' சுந்தரரும் சேரமான் பெருமான் நாயனாரும் திருக்கையிலை செல்லும் காட்சி சிறந்த ஓவியங்களாக விளங்குகின்றன.

## நடன, நாடகக்கலைகளையும் கோயில்கள் வளர்த்தன

## இசை வளர்ச்சி

நுண்கலைகளிற் சிறந்த இசைக்கலை கோயில்களிற் பெரிதும் வளர்ந்தது. இறைவனை இசையினால் வழிபடும் முறை கோயில்களில் முக்கியத்துவம் பெற்றது. நாயன்மார்களும் ஆழவார்களும் தலங்கள் தோறும் சென்று இறைவனை இனிய பாடல்களின் மூலமாக வழிபட்டனர் இவர்களது பாடல்களுக்கு இசைவகுக்கப் பட்டிருந்தது திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்கசூளாமணியும் சம்பந்தரது பாடல்களுக்கு இசை வகுத்தனர் முழவு, வங்கியம், உடுக்கை, சங்கு, துந்துபி, மொந்தை போன்ற வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. யாழ், வீணை போன்றவையும் இசைக் கருவிகளாகப் பயன்படுததப்பட்டன. வாத்தியங்களை இசைப்பவர்களும் கோயில்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். இறைவனையே இசை வடிவாகக் கண்டு போற்றினர். இறைவன் ஏழிசையாய் இசைப்பயனாய்'' இருப்பவன் என்று சுந்தரர் பாடுகின்றார். ''பண் அவனே பண்ணின் திறனும் அவனே'' என்று நாவுக்கரசர் போற்றிப் பரவுகின்றார். பல்லவ மன்னர்களில் மகேந்திரவர்மன், இராஜசிம்மன் போன்றோர் இசைக்கலையில் ஆர்வமுடையவர்களாக விளங்கியதுடன்' கோயில்களில் அக்கலையை வளர்த்தனர். சோழர் காலப் பகுதியில் நாயன்மாரினால் பாடப்பட்ட பாடல்களை திருமுறைகளாக மன்னர்கள் தொகுப்பித்ததுடன் அவற்றைக் கோயில்களில் ஓதுவதற்கும் ஓதுவார்களை நியமித்தனர். இராஜராஜசோழன் தனது தஞ்சைப் பெருங் கோயிலில் திருமுறை ஓதுவதற்கு 48 ஓதுவார்களை நியமித்திருந்தான். மேலும் சோழ மன்னர்கள் ஓதுவார்களை மேற்பார்வை செய்வதற்கு தேவாரநாயகம் என்னும் உயர்நிலை உத்தியோகத்தர்களையும் நியமித்திருந்தனர். கோயில்களில் வேத பாராயணஞ் செய்வோர், திவ்யபிரபந்தம் இசைப்போர், நூலியற்றும் கவிஞர்களும் ஆதரிக்கப்பட்டனர். கோயில் வழிபாட்டில் தோத்திரம் முக்கியஇடத்தைப் பெறுகிறது. வேதங்கள், வேதாங்கங்கள், அறுவகைத்தரிசனங்களின் சூத்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றிலிருந்து தெரித்தெடுக்கப்பட்ட மிகச்சிறியஅளவு பகுதியை அர்ச்சகர்கள் ஓதிய பின்னர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் என்ற ஒழுங்கில் திருமுறைகள் ஓதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கோயிலும் ஆடற்கலையும்

நடனம், நாடகம் போன்ற கலைகளையும் கோயில்களே வளர்த்துவந்தன. கோயில்களிற் பெண்கள் சிவன்ஆடிய பலநடனங்களையும், வேறுநடனங்களையும் ஆடியதாக அறியமுடிகிறது. மக்கள்பண்ணிறைந்தபாடல்களைப் பாடியும், ஆடியும் இறைவனை வழிபட்டனர். நாயன்மார்களது பாடல்களிலிருந்து இதனை அறியலாம். ஆண்டவன் முன்னிலையில் இளம்மகளிர் நாட்டியம் ஆடினர் என்பதனை ''பூவைமேனி இளையமாதர் பொன்னும் மணியும் கொழித்தெடுத்து ஆவணவீதியில் ஆடுங்கூடல்'' என்று சம்பந்தர் போற்றுகிறார். சுந்தரர் பெண்கள் தம்நிலைமறந்து ஆடுவதை ''தையல்மடவார்கள் உடையவிழக் குழல் அவி[illegible] என்றதேவார அடியின்மூலம் உணர்த்துகின்றார். சோழர் காலக் கோயில்களில் நடன மண்டபம், நாடகமண்டபம் போன்றன அமைக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. இக்கால கோயில்விழாக்களில் நடனம்முக்கியத்துவம் பெற்றிருந்தது. கோயில்களிளில்நடனமாடும்பெண்கள் பெரும்பாலும் தேவரடியார்கள் என்று அழைக்கப்பட்டனர். இராஜராஜசோழன் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 400க்கு மேற்பட்ட நடனமாதர்களை தஞ்சைப்பெருங்கோயிலுக்கு வரவழைத்தான் என்றுகூறப்படுகிறது. ஆகமங்கள் கூறும்கோயில் வழிபாட்டில் கீதம், வாத்தியம், நடனம் மூன்றும் இடம்பெறுதல் வேண்டும். இவைமூன்றும் தௌரயத்திரிகம் எனப்பட்டன. இவைமூன்றினாலும்இறைவனை வழிபடவகுக்கப்பட்ட முறை நுண்கலைகளைப் பேணத் திருக்கோயில் வழிபாடு வழிவகுத்ததைக்காட்டுகிறது. சிதம்பரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர் முதலிய கோயில்களில் நடனக்கலையின் 108 கரணங்கள் சிற்பமாக அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. பிற்கால கோயில்வழிபாட்டில் நடனம் ஆடும்முறை அருகிவிட்டது எனலாம். கோயில்விழாக்களில் நாடகங்களும் இடம்பெற்றன. மகேந்திரவர்மன், மத்தவிலாசப்பிரகடனம்' என்றநாடகநூலை இயற்றினான். சோழர்காலத்தில் தஞ்சைப்பெருங்கோயிலில் வைகாசிவிழாவில் ''இராஜராஜேஸ்வரநாடகம்'' நடித்துக்காட்டப்பட்டது என்று கல்வெட்டுச்செய்தி ஒன்றுகூறுகிறது. அது இராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெருங் கோயில்பற்றிய நாடகமாக விருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## கல்வித் தொண்டு

தமிழ்நாட்டில் கல்விவளர்ச்சிக்குத் தொண்டாற்றியவை கோயில்களே. பலபெரிய கோயில்களில் மடங்கள்இருந்தன. அவற்றில்கல்வியில்சிறந்த துறவியர்களும் மாணவர்களும் தங்கியிருந்தனர். இங்கு மாணவர்களுக்கு சமயக்கல்வியும், பொதுக்கல்வியும் போதிக்கப்பட்டது. இத்தகையமடங்கள் இருந்தகோயில்களில் ''சரஸ்வதிபண்டாரம்'' எனப்படும் நூல்நிலையங்கள் இருந்ததாகவும் அறியப்படுகிறது திருமுக்கூடல், எண்ணாயிரம், திரிபுவனம், திருவொற்றியூர், திருவாவடுதுறை போன்ற இடங்களைச்சேர்ந்த கோயில்களில் கல்லூரிகள் இருந்தமையால் அங்குபல்வகைச் சாத்திரநூல்களைக் கொண்ட நூல்நிலையங்கள் இருந்திருக்கலாம் என்றுகூறப்படுகிறது.

கோயில்கள் மருத்துவமனைகளாகவும் பணியாற்றிவந்துள்ளன காஞ்சிபுரத்துக்கு அண்மையிலுள்ள திருமுக்கூடல் என்னும்ஊரில் ,வீரசோழன்' ஆதுலர்சாலை என்னும்மருத்துவமனை இருந்ததாகக் கல்வெட்டுக்கூறுகிறது மருத்துவமனைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் 'மருந்தாடும்பெண்டிர், என்றுஅழைக்கப்பட்டனர்.

மக்களுக்கு பணஉதவிபுரியும் வங்கிநிறுவனங்களாகவும் கோயில்கள் விளங்கின. கோயில்இருந்த பொக்கிசசாலை 'ஸ்ரீபண்டாரம்' எனப்பட்டது. அதுபற்றிய கணக்குப்புத்தகம் 'ஸ்ரீபண்டாரப் புத்தகம், என்றுஅழைக்கப்பட்டது. எல்லாக்கோயில்களின் வரவுசெலவுக்கணக்குகளும் அரசாங்க அதிகாரிகளினால் ஆண்டுதோறும் கணக்கிடப்பட்டது. பெரும் வருவாய் உள்ள கோயில்கள் சமூகத்திற்குத் தேவையான பணத்தை வட்டிக்குக் கொடுத்துத் தொழிற்பட்டன.கோயில் நிறுவனங்கள் மக்களுக்குத் தொழில் வாய்ப்பை அதிகரிக்கும் நிலையங்களாகவும் காணப்பட்டன. தஞ்சைப் பெருங் கோயிலில் 600க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பல்வேறு நிலையிலும் தொழில் புரிந்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டில் கோயில்கள் வழிபாட்டு நிலையங்களாக விளங்கியதுடன், கட்டிடம், சிற்பம்' ஓவியம், இசை' நடனம், நாடகம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றி வந்துள்ளன. கல்வி நிறுவனங்களாகவும், பண உதவி புரியும் வங்கி நிறுவனங்களைப் போலவும், வைத்திய நிலையங்களாகவும் கோயில் நிறுவனங்கள் விளங்கின. இதனால் தமிழ் நாட்டுக் கோயில்கள் பண்பாட்டு நிலையங்கள் என்று போற்றப்படுகின்றன.

கிருஷ்ணவேணி நோபேட்

வெளிநாடு செல்வதற்கு
★ விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்
(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)
இன்றே நாடுங்கள்
மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.
8, மருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் நவீனம்




# 11

**பெண்** தூக்கல் விவகாரம் நினைத்தது போல நடக்கவில்லை என்பது சோமருக்கும் பண்டாரிக்கும் மட்டும் தான் தெரியும்.

''ஐயா ரெண்டிலேயும்தான் கண்ணைப் போட்டிருந்தார், ரெண்டத்தா ஒண்டு ஆப்பிட்டுது'' என்று பண்டாரி மனத்தினுள்ளே சொல்லிக் கொண்டான்.

சோமருக்கு மனதுக்குள் சற்று வெட்கமாகத்தான் இருந்தது ''அக்காள் என்று நினைச்சு உன்னைத் தூக்கிக் கொண்டு வந்திட்டன்!'' என்று இளையவளிடம் எப்படிக் கூறுவது?

சிவக்கொழுந்திக்கும் கூட அவர் உள் இரகசியத்தைச் சொல்லவில்லை.

''சின்னையா இலந்தைப் பழப்புழுப்போலே ஒரு பொம்பிளையைக் கொண்டு வந்து விட்டார்'' என்று மனத்திருப்தி அடைந்துவிட்டதுடன் நில்லாமல் அந்த இலந்தைப் பழபுழு ஐயாவைக் கடித்துத் தொல்லை பண்ணுமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஐந்து பத்து நாளாகப் படாத பாடு பட்டு அவளைச் சுயநிலைக்குக் கொண்டு வந்து விட்டாள் சிவக்கொழுந்தி.

காசிப்பிள்ளை முதலி இலேசுப்பட்டவரல்ல. கச்சேரிக்குள் தனக்கிருந்த செல்வாக்கு அத்தனையையும் பயன்படுத்தி சோமர் வீட்டுக்குள் புகுந்து மகளை சிறை மீட்டு, சோமரையும் கைதியாக்கி விட முயற்சிகள் எடுத்தார். ஆனல் பொலீஸ் நிலையத்தில் இருந்த பரந்த செல்வாக்கினல் முதலியின் முயற்சிகளைச் சோமர் முறியடித்துவிட்டார்.

பின்பு ஒரு நாள் மிகவும் கோலாகலமாக இராசரத்தினத்தாரின் ஏக புதல்வன் சோமசுந்தரத்திற்கும் காசிப்பிள்ளை முதலியாரின் கனிஷ்ட புத்திரி ராசாத்தி அம்மாளுக்கும் திருமணம் பகிரங்கமாக நடந்தேறிவிட்டது.

''என்னடாப்பா, மூத்தவளுக்குக் கலியாணம் பேசச் சொல்லி என்னட்டைச் சொல்லிப்போட்டு இளையவளைக் கட்டியிருக்கிருய் என்ன?'' என்று மணவறையில் வைத்து ஆனைக்கோட்டை மணியகாறன் மூங்கிலடி வைரமுத்தர் சோமரின் காதுக்குள் கேட்டார்.

''நான் என்ன காணும் உமக்குச் சொன்னனுன்? நினைச்சதைச் செய்து காட்டிறன் எண்டுதானே சொன்னனுன்!'' என்று சோமரும் பதிலை வயிரமுத்தரின் காதுக்குள் சொல்லிவிட்டார்

கல்யாணம் செய்துகொண்ட ராசாத்தியம்மாள் இத்தனைக்கும் மனைவியென்ற அந்தஸ்த்தினைப் பக்குவமாகப் பாதுகாத்தே வந்தாள்.

நாடகக் கொம்பனிகளை ஒழுங்கு செய்வதற்காகச் சோமசுந்தரத்தார் அடிக்கடி தென் இந்தியாவுக்குப் போய் வந்தார். ''அங்கேயும் அவருக்குக் குடும்பங்கள் உண்டு'' என்று மற்றவர்களால் பேசப்படும்போது மனைவியான ராசாத்தியம்மாள் ஆத்திரமோ அசூயையோ பட்டதில்லை. ''இந்த மட்டிலாவது நின்றுவிட்டால் போதாதா?'' என்பதுதான் அவள்ஏக்கமெல்லாம்!

சோமசுந்தரத்தாரின் இந்த வளர்ச்சிக்கெல்லாம். பண்டாரியும் ஒட்டு!

எந்த வேலை அவர் ''பண்டாரி என்று குரல் வைக்கிருரோ அந்த வேளையில் பண்டாரி ஆஜராக வேண்டும். குறைந்த பட்சம் ''ஓமோம் ஐயா'' என்று குரலாவது கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் அவருக்குக் கெட்ட கோபம் வரும்!

கடைசியாக ஒரு தடவை அவர் பண்டாரியையும் இந்தியாவுக்கு அழைத்துச்செல்வதாகமுடிவெடுத்தார்.

முடிவாகிய நாளிலிருந்து பண்டாரியின் முகத்தில், உடம்பில் புத்தம் புதிய சோபை வந்துவிட்டது.

அவன் மனைவி முத்தி அப்போதுதான் நான்காவது மகனைப் பிரசவித்திருந்தாள்.

ரூபாய் நோட்டினை அவன் கரம் தொட்டதில்லை. ஏதோ அப்போதைக்கப்போது சிறிய நோட்டுக்களாகவும் நாணயக் குத்திகளாகவுந்தான் அவன் கையில் பணம்பட்டதுண்டு. இப்போது அந்த நூறு ரூபாய் நோட்டு அவன் அங்கமெல்லாவற்றையும் புல்லரிக்கவைத்து விட்டது.

சோமர் சாதாரணவேளையில் அணிந்து கொள்ளும் உடைவிஷயங்கள் அவனுக்குத்தெரியும்.

ஆயிரத்து எழுநூற்று மூன்று வேட்டி-
ஆரணியன் சால்வை-
அணில் மார்க்கு பெனியன்!

இவைகளைத்தான் வாங்க வேண்டும் என்பது அவன் ஆசை!

நேராகமுட்டாஸ் கடைச் சந்திச் செட்டியார்புடவைக் கடைக்கே ஓடினன் றிக்சோவுடன்!

அவன் சோமருடன் அந்தக் கடைக்குப்போயிருக்கிறுன்.

''என்னபண்டாரி, இண்டைக்கு ஐயாவுக்காக நீவந்திட்டாய் போலைக்கிடக்கு? ஐயா என்னவாங்கியரச் சொன்னவர்?'' இப்படிச்செட்டியார் கேட்டார்.

''ஐயாக்வுகில்லை எனக்குத்தான் எடுக்கவந்தனுன்!'' -இப்படிப் பண்டாரிமிடுக்காகப் பதில்சொன்னுன்.

ஒரு ஆயிரத்தெழுநூத்து மூண்டு வேட்டி ஒருஆரணியன் சால்வை, ஒருஅணில்மார்க் பெனியன்.'' என்றுபண்டாரி சொன்ன போது செட்டியாருக்கு ஆச்சரியமாகஇருந்தது. சொல்லப்பட்ட பெரியமனிதர்களைத்தவிர இவைகளை வேறு யாரும் எடுப்பதில்லை என்பது செட்டியாருக்குத் தெரியும்.

''என்னபண்டாரி..... உனக்கு.....''

செட்டியார் இழுத்தார்.

''எனக்குத்தான். ஏன். நான் உதுகளை உடுக்கப்படாதே? சோமர்விட்டாலும் நீர்விடீர்போலகிடக்கு!''

பண்டாரி குத்தலாகப் பேசினுன்.

செட்டியார் இதற்குமேல் பேசவில்லை. அவைகளை எடுத்துப்போட்டார்.

பண்டாரிகணக்குக் கேட்டான்.

''பதினுறு றூபா நாலு பணம்'' என்றுசெட்டியார் கணக்குச்சொன்னர்.

பண்டாரி மடிக்குள்இருந்து நான்காகமடிக்கப்பட்ட நூறு ரூபாய்நோட்டை எடுத்துவிரித்தான் அதன்மடமடென்ற ஓசை செட்டியாரை திடுக்குற வைத்தது.

பண்டாரியிடமிருந்து அவர் இந்தநோட்டை எதிர்பார்க்கவில்லை.

இப்படி நோட்டுகள் அவரிடம்வருடத்தில் இரண்டோ மூன்றோதான் வருவது வழக்கம்!

மனைவி முத்திக்கென ஒரு நார்ப் பட்டுசேலையும் எடுத்தான் அவன்கணக்கும் எட்டுரூபாய் எட்டுப்பணம் ஆயிற்று!

செட்டியாருக்கு இன்றுநல்ல வியாபாரம்!

றிக்சோ ஆசனதட்டில் உடுப்புப் பொதியைகொலுவிருத்திக் கொண்டு பண்டாரிபுறப்பட்டு விட்டான்!

மனம் பொறுக்கமாட்டாமல் செட்டியார் கடைக்கு வெளியே வந்து, பண்டாரிபோகும் எடுப்பைப் பார்த்துவிட்டு உள்ளேசென்றுர்.

''சனிக்கிழமை பின்னேர றெயிலுக்குப் பிரயாணம்'' என்றுமுடிவாயிற்று.

இரண்டுநாட்களுக்கு முன்பாகவே பண்டாரி உறவினர்களுக்குப் பயணம் சொல்லத் தொடங்கிவிட்டான்.

சனிக்கிழமையும் வந்தது.

றெயில் சரியாக ஆறுமுப்பதுக்குத்தான் நிலையத்திலிருந்து புறப்படும்.

ஐந்தரைமணியிருக்கும்!

பண்டாரி றிக்சோவை இழுத்துகொண்டுவந்துசேர்ந்தான்.

வழக்கமில்லா வழக்கமாக அவன்றிக்சோ இழுத்துவரும் கொலுவை வீதியால் போவோர் வருவோர் ஆச்சரியத்துடன் திரும்பிப்பார்த்துக் கொண்டுசென்றனர்,

ஆயிரத்து எழுநூற்றுமூன்று வேட்டிக்கட்டு!

அணில்மார்க்குபெனியன்.

ஆரணியன் சால்வைத் தலேப்பா!

சோமர் வெளியே வந்து பார்த்தார், திடுக்குற்றுப் போய்விட்டார்.

''இதென்னடா கோலம் பண்டாரி?''

கேலியாகக் கேட்டார் சோமர்.

பண்டாரிக்கு வெட்கம் வந்தது. பயம்வரவில்லை

தான்எதுசெய்தாலும்சோமர் அதுக்கு ஒட்டு என்பது அவன் துணிவு!

அவன் போசாமல் நின்றுன்!

''சரிசரி றிக்சோவை ஏன்ரா கொண்டுவந்தனி? உதையும் கொண்டேயடா இந்தியாவுக்குப்போறது?''

சோமர் மீண்டும்கேலியாகவே கேட்டார்.

''ஸ்டேசனடிக்கு மூத்தமோனை வரச் சொல்லிப் போட்டு வந்தனுன், அவனட்டைறிக் சோவைக்குடுத்து விடலாம்!''

பண்டாரி மொட்டையாகச் சொன்னுன்.

சோமருக்கு விஷயம் விளங்கி

(12ம் பக்கம் பார்க்க)

திலிருந்து சோமர் முழு மனிதன் ஆகிவிட்டார். சடுகுகண்ட பருவத்திலிருந்து வளர்ந்து வந்த மிடுக்குகள் யாவும் முற்றிப் பழுத்துப் பக்குவம் அடைந்து விட்டன.

வெள்ளைத்தோல் துரைமாரை அதிகாரிகளை, பெரிய மனிதர்களை வீட்டுக்கு வலிந்து அழைத்துவந்து கேளிக்கைகள் விருந்துகள் நடத்துவது தனக்கு இன்பமெனக் கண்ட கண்டவற்றைப்பெற்று முடிப்பதற்காக எதையும் செய்வது எதிரிகள் எனக் காண்பவர்களின் 'தலே' விதிகளை நிர்ணயிப்பது ஆகியவை உட்படச் சகலத்தையுமே செய்து முடிப்பதற்குப் பல தலை முறையினர் திரட்டி வைத்துச் சென்ற செல்வம் இருக்கிறது போதாதென்று முக்கந்தர் முறை வடிவத்திலும், கலே வடிவத்திலும், வேறு பல வடிவங்களிலும் செல்வம் ஊற்றெடுக்கிறதே!

அன்ருட வாழவுககாக அவரின் கையை எதிர்பார்ப்பவர்கள் அனேகர்

வயல், வாய்க்கால், குடியிருப்புக் காணிகள், தென்னந் தோட்டங்கள், நாடகக் கொட்டகை, கணக்கு வழக்கு என்ற விதத்தில் குற்றேவல் புரிவோர் ஐம்பதுக்கும் அதிகமானேர். முக்கந்தர் வரிசையில் இருபதுக்கும் மேலானேர். அன்ருடம் கை நீட்டி யாசகம் கேட்போர் சராசரி பத்துக்கு மேல்! அவரின் மாமிச உணர்வின் பெண்கள் வரிசையில் நிரந்தரமாக நான்கோ ஐந்தோ!

சோமசுந்தரத்தாருக்கு சட்டப்படி மனைவியாகிவிட்ட தன்னை இந்தியாவுக்கு வரச் சொல்லிச் சோமர்படாதபாடு படுவதாக பண்டாரி பெருமையோடு அவளிடம் சொன்ன போது இங்கினேக்கை தான் நடத்திற நாடகங்களுக்கு உன்னை விடுகாயாய்ப் பாவிச்சது போதாதெண்டு இந்தியாவிலையும் பாவிக்கப்போருராக்கும்!'' என்று முத்திஎதையும் எதிர்பாகக்காமலே பட்டென்று பேசிவிட்டாள்.

பண்டாரிக்கு வந்ததே ஒரு வரத்து!

பெத்தவீடென்றும் பார்க்காமல் அவன் அவளை மோது மோதென்று மோதிவிட்டான் முத்தி மயங்கிப்போனுள்.

மயக்கம் தெளிய அதிக நேரம் ஆகவில்லை.

அவளுக்கு இதுபழக்கம்!

மாதத்திற்கு ஒரு தடவையேனும் சோமசுந்தரத்தாரைப்பற்றி ஏதாவது சொல்லி இப்படி உதைவாங்காவிட்டால் அவளுக்குத் திருப்திப் படுவதில்லை.

இன்று பச்சை உடம்புக்காரியாக இருந்ததால் சற்றுமயக்கம் வந்துவிட்டது! அவ்வளவு தான்!

''இந்தாடா பண்டாரி, இதைக்கொண்டுபோய் உனக்குத்தேள்வையான உடுதுணியளையும் எடுத்துப்போட்டு மிச்சத்தை முத்தியெட்டைக் குடு!'' என்று சொல்லிக் கொண்டே சோமசுந்தரத்தார் நூறு ரூபாய் நோட்டு ஒன்றினைப் பண்டாரியிடம் கொடுத்தார்.

அந்த நூறு ரூபாய் நோட்டைப் பெற்றபோது பண்டாரியின் உள்ளம் நடுங்கியது.

இந்த நாள் வரை நூறு

## கவிதைகள்

### செய்வேன்!

என் கவியால்
இங்கிருக்கும்
வானினையும் மண்ணினையும்
பாய்ந்து வரும் காற்றினையும்
பாடேன்; இன்னும்
பெண்ணினையும் அன்ன
வள் தன்
பேரழகு உருவினையும்
காமுகரின் தீனுக்காய்
கவியாக்கிவிட மாட்டேன்!
மாருய்,
மாடாக உழைத்திந்த
மண்ணுக்காய் பலியான
தொழிலாள விவசாயப்
பெருமக்கள் தம்வாழ்வில்
இழந்துவிட்ட இன்பங்
களாம்
இளமைகளை வசந்தங்களை
எண்ணற்ற சுகங்களினை
மீட்டெடுக்கும் போர்வா
ளாய்
என்கவியை தொடுப்பேன்!

ஆலையினில் வயல் வெளியில்
அனுதினமும் உழைத்து
ழைத்து
வேதனையை நெஞ்சினிலே
பெருஞ் சுமையாய்க்
கொண்டுவிட்ட
மக்களவர் அடிவயிற்றில்
மூண்டெரியும் பசிநெருப்பு;
அக்கினியாம் அதைஅள்ளி
ஆ... வென்று எழுந்து நிற்
கும்
மாளிகையைத் தகர்த்து
விட
என்கவியை தொடுப்பேன்!

சாதியென்ற திமிரோடு
சமூகத்தைத் துண்டாடும்
நீதியற்ற செயல்களதை
என்கவியால் கொல்வேன்!
சீதனத்துக் கொடுமைக
ளால்
சிறு குடிசை அதற்குள்ளே
வேதனையால் பெருமூச்சு
விட்டிங்கே அழும்அந்தப்
பாவையரின் விடிவுக்காய்ப்
பல கவிகள்செய்வேன்!

தூசுதட்டும் வேலைகளை
என்கவியால் செய்யேன்
துருப்பிடித்த பாத்திரத்தை
மினுக்கி வைக்கமாட்டேன்
''தூசு''க்கும் ''துரு''வுக்
கும்
அடிப்படைத்தான் என்ன?
அந்த அடித்தளத்தைத்
தகர்த்துவிட
கவிதைகளைச் செய்வேன்

● மாத்தளை
ஆ இராசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகைச் சுற்றிவரும் பிரெஞ்சு இளைஞன்

சந்திப்பு:
பா. அனந்தகிருஷ்ணன்

உலகில் போக்குவரத்து அபரிமிதமாக வளர்ந்துள்ளது. வேண்டிய இடத்துக்கு வாயு வேகத்தில் சென்றுவிடமுடிகிறது ஆனல் ஒரு பயணத்தை அதன் சுவைகுன்றாது முழுமையாக அனுபவிக்க இவ்வேகம் முற்றிலும் சரிவராது'' என்கிறார் பிரெஞ்சு நாட்டு இளைஞரான கீய்லியபொட் Guy Llabot இவரின் வயது 28. இவர் ஒரு வணிகத்துறைப் பட்டதாரி

## 'ஹிச்சு ஹைக்கிங்'

''உலகைக்கால் நடையாகச் சுற்றிப்பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன் 'ஹிச்ஹைக்கிங்' (Hitch Hiking) முறையைப்பயன்படுத்தி தற்போது எனது ஆசையைப்பூர்திசெய்து வருகிறேன்'' என்று கீய்லியபொட் கூறினர். (கால்நடையாகச் செல்வது வழியில் வாகனங்களை மறித்து அவைகொண்டு சென்றுவிடும் இடம்வரை ஏறிச் செல்வது 'ஹிச்ஹைக்கிங்' பயணமாகும்.)

கீய்லியபொட் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவரை நான் கடந்தவாரம் சந்தித்தேன். உலகைமிகவும் மெதுவாகச் சுற்றிவருகிறாரல்லவா? ஒரு பொறுமைசாலியாகவே காணப்படுகிறார். பலரைக்கண்டவரல்லவா? மிகவும் இதமாகவும், சுவாரஸ்யமாகவும் பேசுகிறார்.

## ஒரு டாலருக்குள் செலவு

1979ம் ஆண்டு ஜூன் மாதம் 6ந் திகதி வட அமெரிக்காவில் அலாஸ்க்காவிலிருந்து தமது 'ஹிச்ஹைக்கிங்' பயணத்தைஇவர் ஆரப்பித்தார். நான்குவருடங்களைப் பூர்த்திசெய்துவிட்டார். இன்னும் இருவருடங்களில் தமது முழுப்பயணத்தையும் முடித்துவிடுவேன் என்கிறார் லியபொட்.

மிகவும் நீண்டபயணமாதலால் ஒரு சில கட்டுப்பாடுகளைத் தீவிரமாகக்கைக்கொள்கிறார். ஒருநாளைக்கு ஒரு டாலருக்குள்ளேயே செலவுசெய்வதென்று உறுதியாக இருக்கிறார். முதுகில் ஒரு பயணப் பொதியை (Ruck sack) மட்டுமே. சுமைகளைக் கூட்டாது காவிச் செல்கிறார். சமுத்திரங்களைக் கடக்கும்போதுமட்டும் கப்பல்களில் ஏறுவதாகவும், விமானங்களைத் தவிர்ப்பதாகவும், ரயில்களில் ஏறுவதில்லையென்றும், தமது பயணத்தைப்பற்றி இவர் மேலும் கூறினர்.

## அமெரிக்காவின் சுரண்டல்

கனேடியர்களையும், அமெரிக்கர்களையும் நட்புடன் பழகத் தெரியாதவர்கள், வேகமாக இயந்திரங்கள் போல இடங்குபவர்கள் என்று கூறுகிறார் லியபொட். மெக்ஸிக்சோவிலிருந்து தென் அமெரிக்கா முழுவதிலும் தமக்கு சிறந்தஉபசாரங்கள் கிடைத்தன என்றுகூறும் இவர் மத்தியஅமெரிக்க நாடுகளில் அமெரிக்காவின் சுரண்டல்களைச் சாடுகிறார்.

''மத்திய அமெரிக்க நாடுகள் மிகவும்வறியவை. விவசாயப்பண்டங்களை அவை உற்பத்தி செய்கின்றன. ஆனல் அமெரிக்காமிகவும் குறைந்த விலையில் அவற்றைப் பெறுகிறது. போதாமைக்கு அது அந்நாடுகளில் அரசியல் பிரச்னைகள்மூலம் மக்களைக் குழப்பியடித்து வருகின்றது'' என்றார் லியபொட்.

## 'சகாரா' அழகு

ஆபிரிக்காவிலும் இவர் பயணம் செய்துள்ளார். அல்ஜீரியாவிலிருந்து நைகர் நாடுவரை சகாராப்பாலைவனம் ஊடாக பிரெஞ்சுத்தம்பதியொன்றின் காரில் இவர்வந்துள்ளார். 'சகாரா' உலகில் தாம்கண்டமிகவும் அழகான பகுதிகளில் ஒன்றெனக் கூறுகிறார். ''மாலையில் சூரிய அஸ்தமனம் இங்கு ஒருகண்கொள்ளாக்காட்சி. அலை அலையாகபரந்து இருக்கும் சகாரா பாலைநிலம் மாலைமறையும்போது செந்நிறமாகிறது. கடலில் போன்று இங்கும்சூரிய அஸ்தமனம் கண்குளிர வைக்கும் ஒரு நிகழ்ச்சி என்று வர்ணிக்கிறார் லியபொட்

ஆபிரிக்காவில் பல நாடுகளை மிகுந்த சிரமப்பட்டே லியபொட் கடந்துள்ளார். ''நாட்டுக்குநாடு அரசியல் பிரச்னைகளில் மூழ்கியிருக்கின்றன. இதனல் பலநாடுகளுக்கு போகவே முடியாதிருந்தது'' என்று கூறும் இவர், ஆபிரிக்கர்களில் பலர் 100 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததைப் போலவே. இருக்கிறார்கள் போக்குவரத்து, கல்வி, சுகாதாரவசதிகள், பொதுனசத்தொடர்புகள் இம்மக்களுக்கு சரியானவகையில் அமைத்துக்கொடுக்கப்படவில்லை.'' என்கிறார்.

## ''உலகில் அழகான அம்சங்களை அனுபவிக்கத் தெரியாதவர்களே போர, பூசல்கள் என்று இறங்குகிறார்கள்''


## கறுப்பர்கள் அசிங்கமானவர்கள்

தென்னுபிரிக்காவில் இன ஒடுக்கல்களை நேரடியாகவே பார்த்துள்ளார் லியபொட். ''கறுப்பர்கள் அசிங்கமானவர்கள் என்று அருவருக்கிறார்கள் தென்னுபிரிக்க வெள்ளையர்கள். இத்தனைக்கும் அங்கு 75 வீதமானவர்கள் கறுப்பர்கள். மிகுதியேவெள்ளையர். வாகனங்கள், பொதுஇடங்களிலெல்லாம் கறுப்பர்வேறு, வெள்ளையர்வேறு என்ற நிலை. ரயில்வண்டிகளில்கூட இந்த வேறுபாடு. நான் நேரடியாகவே இதனைக்கண்டேன். அருவருப்பான கறுப்பர்கள் விரைவில் தொலைந்துவிடவேண்டுமென தென்னுபிரிக்கா வெள்ளையர்கள் விரும்புகிறார்கள். கறுப்பர்களை ஒழித்துக்கட்டவே கண்மூடித்தனமாக இங்கு இனஒடுக்கல்கள் நடக்கின்றன'' என்றார் லியபொட்.

உகண்டாவைப்பற்றி கூறுவது: ''இப்போது அங்கு இடிஅமீனின் காலத்தைவிடப் பயங்கரமாக இருக்கின்றது. எங்குபார்த்தாலும் லஞ்சம், ஊழல். சிலகிராமங்களுடாக வந்தேன். அப்போது பலகுடிசைகள் எரிக்கப்பட்டுகிடந்தன சிலவற்றில் துப்பாக்கி ரவைகள் போட்டதுவாரங்கள் இருந்தன. இவையிடையிடையே அங்குநடக்கும் இராணுவ அட்டூழியங்களைக் காட்டின.''

(12ம் பக்கம் பார்க்க)

மஹாகவி தண்டி என்பவர் வடமொழிக் கதாசிரியர்களுள் மிகவும் புகழ்பெற்றவர் இவர் எழுதிய தசகுமாரசரிதம் என்னும் வடமொழி நூல் உலகப்பிரசித்தி பெற்றது அதிலே உள்ள கிளைக்கதைகளுள் ஒன்று காமமஞ்சரி என்னும் கணிகை மாதின் கதையாகும். இக்கதை மிகவும் புதுமையானது. இக்கதையின் ஓர் அம்சத்தையடிப்படையாகக் கொண்டு இச்சிறு கவிதை நாடகம் படைக்கப்பட்டுள்ளது. மனித பலமும் பலவீனமும் சித்தரிக்கப்படும் இந்நாடகமூலம் வஞ்சனையின் வெற்றி மனித சமுதாயத்துக்கு ஓர் போதனையாகவே அமைகின்றது என்ற உண்மை போதிக்கப்படுகிறது




கவிதை நாடகம்

**காட்சி — 3**

இடம்: சம்பாநாட்டு அரண்மனை
பாத்திரங்கள்: சம்பாநாட்டு மன்னன், அமைச்சன்

அமைச்சன்:
சம்பாநாட்டுத் தனிப்பெரும் தலைவ
அம்புவி போற்றும் அரசர்க் கரசே!
மாற்றார் மதிக்கும் மாபெரும் மன்னவ
போற்றி உங்கள் பொன்னடி வாழ்க

அரசன்:
மந்திரி யாரே வணக்கம். வருக
சுந்தரக் காமனுக் கிந்நகர் மக்கள்
வருடா வருடம் வழமையாய் எடுக்கும்
அரிய விழாநாள் இன்றே யாகும்

அமைச்சன்:
அறிவேன் மன்னவா, அதுமட்டு மன்றி
இன்று மாலை இடம்பெறும் விழாவில்
காமமஞ்சரியும் கலக்க விருப்பதாய்
மாநக ரெங்கும் மக்கள் பேசுறார்.

அரசன்:
கானகம் சென்ற காம மஞ்சரி
கடிநகர் திரும்பி வந்துவிட் டனளோ?

அமைச்சன்:
ஆமாம் அரசே, அவளுடன் மருச்சி
முனிவரும் சேர்ந்து வந்ததாய்க் கேள்வி

அரசன்:
என்ன? அதிசயம் அமைச்சரே அதிசயம்
எண்டிசை புகழும் இணையிலா முனிவன்
பெண்டிர்பால் உள்ளம் பேதலித் தானென
நம்பிட என்னல் முடியவே யில்லை.

அமைச்சன்:
உண்மைதான் மன்னவா உறுதி குலைந்து
பெண்ணிவ ளோடு பெருந்தவ முனிவன்
இந்நகர் வந்துள்ளான்.

அரசன்:
... எல்லாம் விதியே

அமைச்சன்:
விதியல்ல அரசே விலை மாது செய்த
சதி, அதனலே தவத்தை மறந்தான்

அரசன்:
[பெருமூச்சுடன்]
என்தன் தலைமையில் இந்நகர் மக்கள்
கடந்த வருடம் எடுத்த விழாவில்
நடந்த நிகழ்ச்சிதான் இதற்குக் காரணம்

அமைச்சன்:
ஆமாம்அரசே அன்றைய விழாவில்
ஆடற் கரசி யாகிய காம
மஞ்சரி வேறோர் மங்கை யுடனே
வெஞ்சினங் கொண்டு விடுத்த சபதம்
இன்றும் என் காதில் எதிரொலிக் கின்றது
கொஞ்சும் சதங்கை குலுங்கி யிசைத்திட
வஞ்சி யிவனுடன் வாகாய் நடனம்
செய்த செண்பக வல்லி சினந்து
காம மஞ்சரி யாளைப் பழித்து
வலிந்து சண்டைக்குச் சென்றதா லன்றோ
கலைந்தது மருச்சி கடுந்தவம்...

அரசன்:
... உண்மை
செண்பக வல்லி சீற்றத் தோடு
காம மஞ்சரி யாளைக் கடிந்து
அடியே சிறுக்கி அதிகம் பேசிப்
படபடக் காதே பற்றேயில்லா
மருச்சி மாமுனிவரின் தவத்தையே குலைத்த
தாசியைப் போலச் சலசலக்காதே
என்றவ ளன்று இயம்பா திருந்தால்...
இன்றிந்த முனிவர் இந்நிலைக் காகார்

அரசன்:
முற்றிலும் சரியே, முனிவரை வென்ற
பொற்கொடி காம மஞ்சரி யாளின்
சொற்படி கேட்கும் தொட்டாட்டு வேலைச்
சேவகி யாகச் செண்பக வல்லி
ஆகப் போகிறுள். அந்தோ பாவம்.

அமைச்சன்:
சபதத்தில் தோற்றவர் வெல்பவ ருக்கு
அடிமை யாவதா யன்றோ அன்று
இருசா ராரும் ஏற்றுக் கொண்டனர்.

அரசன்:
என்றாலும் பெண்கள் இப்படி நடப்பது
நன்றல்ல எமது நாட்டுக்கே யீனம்
தவத்தைக் குலைக்கும் சண்டாளத்
தனத்தை
நடக்க விட்டது நமது பிழையே

அமைச்சன்:
நடந்ததை எண்ணி நலிவதனலே
முடிந்தவை திரும்ப ஆவதே யில்லை
நேற்று நிகழ்ந்ததை நினைத்து வருந்தி
சுற்றில் கிடைப்பது இதயச் சுமையே
நாளை நடப்பதை நன்கு யோசித்து
வாழும் வழியை வகுப்பதே மேலாம்.

— திரை —

[அடுத்த வாரம் முற்றும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அச்சுவேலி தம்பிமுத்துவுக்கு இலண்டனில் அஞ்சலி

## லண்டன்மடல்: ''உதயதாரகை''

அச்சுவேலியில் பிறந்த ஒருதமிழ்மகனுக்கு அஞ்சலி செய்யும் முகமாகஇலண்டனில் மேற்கு கென்ஸிங்டனில் அமைந்துள்ள இந்தியக்கலைக் கூடமான ''பாரதீய வித்ய பவானில்'' அண்மையில் ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

1915ல் அச்சுவேலியில் பிறந்த தம்பிமுத்து ஒருசிறந்த ஆங்கிலக்கவிஞர் இவர்பிரிட்டனில் வந்து குடியேறிய பின் ''இலண்டன்கவிதை'' (Poetry London) என்றசஞ்சிகையை ஆரம்பித்து, அதன் ஆசிரியராக இருந்தார் டைலன் தோமஸ், லோறன்ஸ் டூறெல், கத்றீன் றேய்ன், டேவிட் கஸ்கின், கிறஹாம் சதர்லன்ட், ஹென்றி மூர், ஜோன்பைப்பர், பாபரா ஹெப்வர்த் போன்றபுகழ் பூத்த சமகால ஆங்கிலக் கவிஞர்களின் ஆக்கங்களுக்கு ஊக்கம் அளித்து களம் அமைத்துக் கொடுத்து, அவர்களுக்குக் கொழுகொம்பாகவிளங்கினர்.

தம்பிமுத்துவின் ''இலண்டன்கவிதை'' சஞ்சிகை அதில் வந்தசிருஷ்டிபூர்வமான ஆக்கங்களின் திறனுல் உலகப்புகழ் பெற்றது. 1983ல்தனது 67வது வயதில் தம்பிமுத்து காலமான போது அவரது மரணத்தை முழு உலகமுமே அனுட்டித்தது

அவர் ஞாபகார்த்தமாக நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் இந்திய நர்த்தகி ஷோபனு ஜெய்சிங்கின் பரதநாட்டியம் முக்கியமான ஒரு அம்சமாக அமைந்தது. சிங்கள நர்த்தகி விபுலியின் கண்டிய நடனமும் றெஹான் [illegible] சேறம் அளித்த கண்டிய மத்தளக் கச்சேரியும் கூட இடம் பெற்றன. பிரபல கவிஞர் பிரான்சிஸ் ஸ்காரின் அஞ்சலி உரையுடன் ஆரம்பித்த இந்த நிகழ்ச்சியில் அமரர் தம்பிமுத்துவின் இளைய சகோதரர்களான போலினஸ், கிறிஸான்தஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### மாஓவின் விதவை

### குழுவினருக்கு ஆதரவு

### கூட்ட இலண்டனில்

### ''சண்''

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (பீகிங்) தலைவரான திரு. என். சண்முகதாஸன் அண்மையில் இலண்டன் வந்திருந்தார். ''புரட்சிகர சர்வதேச இயக்கம்'' என்ற பெயரில் ஒருபுதிய சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டை அறிவிக்கும் முகமாக நடைபெற்ற சர்வதேச பத்திரிகை மகாநாட்டில் கலந்து கொள்ள ''சண்'' இலண்டன் வந்திருந்தார்

மக்கள் சீனுவின் தலைவர் மாஓசேதுங் மரணித்த பின்னர், அவரது மனைவி உட்பட நான்கு தீவிரவாத சீனத்தலைவர்களுக்கெதிராக களையெடுப்பு சீனுவில் நடந்ததும், இந்நால்வரும் சிறையில் அடைக்கப்பட்டதும் தெரிந்ததே

இப்போது புதிதாகப் பிறந்துள்ள ''புரட்சிகரசர்வதேச இயக்கம்'' இவ்வாறு ஒதுக்கப்பட்ட, ''சதிகாரக்கும்பல்'' (Gang of four) என்று அழைக்கப்பட்ட நால்வருக்கும் ஆதரவான சர்வதேச கம்யூனிஸ்ட் பிரிவுகளை ஒருங்கிணைக்கிறது. இவர்கள், தற்போதய சீனத் தலைவர்கள்அந்நாட்டின்மக்கள் புரட்சிக்கு துரோகம் செய்து விட்டதாகக் கருதுகிறூர்கள்.

''சண்'' தலைமை வகிக்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி தலைவர் மாஓ உயிருடன் இருக்கையில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததும், அவரது மரணத்தின் பின், அத்தொடர்புகளை அறுத்துக்கொண்டதும் தெரிந்ததே.

உலகு தழுவியரீதியில், ஆங்காங்கே இயங்கிவரும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கெல்லாம் இந்த ''புரட்சிகர சர்வதேச இயக்கம்'' தனது தோழமையான ஆதரவைத் தெரிவிக்கும் என்று ''சண்'' இலண்டனில் கூறியுள்ளார்.

அயர்லாந்தில் நடைபெறும் ஆயுதப் போராட்டம் மிகச் சரியானதும் அத்தியாவசியமானதுமான ஒரு எழுச்சி என்று கூறிய ''சண்'' அவர்களை பயங்கரவாதிகள் என்று வர்ணிக்க முனைபவர்கள் ஏகாதிபத்தியத்தின் ஏவலர்களே என்றும் கூறியுள்ளார்!

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை தனதுகட்சி ஆதரித்தாலும், அவர்கள் தனிநாடு அமைப்பதை ஆதரிக்கவில்லைஎன்றும் ''சண்'' கூறியுள்ளார். வடக்கிலும் கிழக்கிலும் வதியும் தமிழ்பேசும் மக்களுக்கு பிரதேச சுயாட்சியே உகந்தவழி என்று 'சண்' கூறிய அதேநேரத்தில், தமிழ் இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தில் இறங்கி, பாராளுமன்றப் பாதையை நிராகரித்தது மிகச்சரியானதே என்றும் கூறியுள்ளார். தமிழ்ப்பகுதிகளில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவம் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம்போல நடந்துகொண்டால் தமிழ் இளைஞர்களுக்கு வேறு என்னதான்வழி இருக்கிறது என்று ''சண்'' கேட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதத்தில் இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்கள் இலங்கையின் பெயருக்குப் பெரியகளங்கம் என்றும்; வன்செயல்கள் நன்கு திட்டமிடப்பட்டு கட்டவிழ்த்து விடப்பட்டன என்றும்; சில போர்வீரர்கள் கொல்லப்பட்டதால் வன்செயல்கள் ஏற்பட்டதாகக் கூறுவது வெறும் நொண்டிச் சாக்கு என்றும் ''சண்'' கூறியுள்ளார்.

''புரட்சிகர சர்வதேச இயக்கத்தில்'' ''சண்'' தலைமை வகிக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை விட. இந்தியகம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட் லெனிஸ்ட்) துருக்கிகம்யூனிஸ்ட்கட்சி (மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட்) நேபாள கம்யூனிஸ்ட்கட்சி (மஷால்) இந்தியபுரட்சிகர கம்யூனிஸ்ட்கட்சி, ஈரானிய கம்யூனிஸ்டுகளின் ஒன்றியம் (சர்பாதரன்) ஆகிய ஆசிய குழுக்கள் இடம் வகிக்கின்றன. பிரிட்டனின் சார்பில் நொட்டிங்ஹாம் குழு, ஸ்டொக்போட்குழு ஆகிய இரு சிறு குழுக்கள் இடம் வகிக்கின்றன.

### இலண்டன் தமிழ்

### மன்றத்தின்

### இரண்டாவது

### புகைப்படக் கண்காட்சி

தமிழ்பேசும் மக்கள்மீது காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் பற்றியும், அவர்களது விடுதலைப்போராட்ட விபரங்கள் பற்றியும் இலண்டன் தமிழ்மன்றம சமீபத்தில் நடத்திய புகைப்படக்கண்காட்சி, இரண்டாவது முறையாகஇலண்டன் ஈஸ்ட்ஹாமிலுள்ள கென்சிங்டன் இளைஞர்மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. பிற்பகல் 3மணி முதல் 10.மணிவரை நடைபெற்ற இந்தக்கண்காட்சியை பெருந்தொகையான தமிழ் மக்களும் பிறநாட்டவர் பார்வையிட்டனர்.

### கருணாநிதியின்மகஜரை

### ஐ நா. கவனத்திற்கு

### எடுக்[illegible]!

'ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் இலங்கைத்தமிழர் பிரச்சினையில் தலையிடவேண்டும் என்று கோரி, ஒருகோடிகையொப்பங்களுடன் திராவிட முன்னேற்றக்கழகம் அனுப்பி வைத்த மகஜரை ஐ. நா. ஸ்தாபனத்தின் மனித உரிமைகள்குழு' கவனத்திற்கெடுக்கும் என புதுடில்லி பாராளுமன்றத்தில் இந்திய வெளிநாட்டு விவகார அமைச்சர் ஸ்ரீ. பி. வி. நரசிம்மராவ் கூறியிருப்பதாக இலண்டனை வந்தடைகின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

### அரசியல் தலைவர்களுக்கு

### ஒரு 'மெடிக்கல்செக் அப்'

அமெரிக்க ஜனாதிபதிப் போட்டியில் பின்வருவோர் இப்போது கோதாவில் இறங்கியுள்ளனர்: றெனல்ட் றீகன். கேறிஹார்ட், ஜெஸி ஜாக்சன், வால்டர் மொன்டேல், றீகன் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும், ஏனையோர் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் நியமனத்திற்குப் போட்டியிடுகிறார்கள் என்பதும் தெரிந்ததே. இதற்கான பிரசாரங்கள் இப்போது தீவிரமடைந்து வருகின்றன. 'அமெரிக்க உடல் நலம்' என்ற சஞ்சிகை கூட தனது மருத்துவ நோக்கினை சற்று ஒதுக்கி வைத்து விட்டு, மருத்துவ ரீதியான பிரசாரத்தில் இறங்கியது எம்மை ஆளத் தகுதியான உடல் நலம் யாருக்கு உண்டு என்ற கேள்வியை எழுப்பி விட்டு, வேட்பாளர்களின் மருத்துவ தாரதம்மியங்களை பின்வருமாறு அட்டவணைப் படுத்தியது:

| வேட்பாளர் | வயது | உயரம் | எடை (இரு) | இரத்த அழுத்தம் | தந்தை இறந்த வயதும் விதமும் | தாய் இறந்த வயதும் விதமும் |
|---|---|---|---|---|---|---|
| றீகன் | 73 | 6அடி 1 அங் | 194 | 120/80 | 60-மாரடைப்பு | 80-பாரிசவாதம் |
| ஹார்ட் | 46 | 6அடி 1 அங் | 173 | 106/76 | 69-மாரடைப்பு | 64-இருதயநோய் |
| ஜாக்ஸன் | 42 | 6அடி 2 அங் | 210 | 112/70 | 68-சுகமே வாழ்கிறூர் | 57-சுகமேவாழ்கிறூர் |
| மொன்டேல் | 56 | 5அடி 11½அங் | 168 | 128/78 | 72-பாரிசவாதம் | 78 மார்பகப் புற்றுநோய் |

| வேட்பாளர் | சிகரெட் | உடற்பயிற்சி | விசேஷ உணவுக் குறிப்புகள் | சாப்பிடும் மருந்துகள் |
|---|---|---|---|---|
| றீகன் | இல்லை | பாரம்தூக்கல் | குறைந்த உப்பு ஆடைநீக்கிய பால் | விட்டமின்கள் |
| ஹார்ட் | சுருட்டு [எப்போதாவது] | நடத்தல் ஓடுதல் | கொலெஸ்டரோல் கொழுப்புச் குறைந்த உணவு | விட்டமின்கள் தைறொயிட் மாத்திரைகள் |
| ஜாக்ஸன் | இல்லை | கூடைப்பந்து ஓடுதல் | மீன் கோழியிறைச்சி | விட்டமின்கள் மூக்கடைப்புக்கு மருந்து [இடையிடையே] |
| மொன்டேல் | சுருட்டு எப்போதாவது | டென்னிஸ், நடத்தல், பனிச்சறுக்கல் | நிறைந்த பழரசம் 3 வேளை மட்டும் உணவு | விட்டமின்கள் இரத்தஅழுத்த மாத்திரைகள் |

இந்தச் செய்திகளை இங்கிலாந்துப் பத்திரிகைகளிலேயே அவசரக் குடுக்கையான 'சன்' பத்திரிகை உடனடியாக ''அமெரிக்க உடல்நலம்'' சஞ்சிகையிலிருந்து மறுபிரசுரம் செய்தது. மறுநாளே ''அமெரிக்கர்கள் எப்படி எப்படி எல்லாம் அலசி ஆராய்ந்து தமது தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறூர்கள்; நமது தலைவர்களை மட்டும் உடல்நல அம்சத்தைக் கணக்கெடுக்காது நாம் தேர்ந்தெடுக்கிறேம்'' என்று அங்கலாய்த்து. பிரிட்டிஷ் தலைவர்களைப்பற்றிய ஒரு சுகாதார மதிப்பீட்டு அட்டவணையை ''சன்'' பத்திரிகை பிரசுரித்தது இந்த அட்டவணையில் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவரும் தற்போதைய பிரதமருமான திருமதி மார்கரெட் தாட்சர், தொழிற்கட்சித் தலைவர் நீல் கின்னெக், லிபரல் கட்சித் தலைவர் டேவிட் ஸ்டீல், சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர் டேவிட் ஓவன் ஆகிய நால்வரும் இடம்பெற்றனர்:

| தலைவர்கள் | வயது | உயரம் | எடை [இரு] | தந்தை இறந்த வயது | தாய் இறந்த வயது |
|---|---|---|---|---|---|
| கின்னெக் | 42 | 5 அடி 9 அங் | 163 | 1971ல் | 1971ல் |
| ஸ்டீல் | 45 | 5 அடி 9 அங் | 156 | 73- சுகமே வாழ்கிறூர் | 71- சுகமே வாழ்கிறூர் |
| ஓவன் | 44 | 6 அடி | 189 | 76- சுகமே வாழ்கிறூர் | 83- சுகமே வாழ்கிறூர் |
| தாட்ச்சர் | 58 | 5 அடி 4 அங் | 129 | 1970ல் | 1960ல் |

| தலைவர்கள் | சிகரெட் | உடற்பயிற்சி | விசேஷ உணவுக் குறிப்புகள் | சாப்பிடும் மருந்துகள் |
|---|---|---|---|---|
| கின்னெக் | சுங்கான் | றகர் | உறைப்பான இந்திய கறிவகைகள் வாத்துஇறைச்சி | இல்லை |
| ஸ்டீல் | இரவு உணவின் பின் சுருட்டு | நீச்சல் குதிரை ஓட்டம், நடத்தல் | சீனி இல்லை கிழங்கு நிறைய உண்டு | இல்லை |
| ஓவன் | இல்லை | நீச்சல், நடத்தல் டென்னிஸ் | அவரைவகை, பழவகை காய்கறிகள் | இல்லை |
| தாட்சர் | இல்லை | நேரமில்லை | கிழங்கு, பாண், சீனி கிடையாது கொழுப்புணவு கிடையாது | விட்டமின் C [இடையிடையே] |

ஆங்கிலேய - அமெரிக்க அரசியல் [illegible] ''ஆரியக்கூத்து'' ஆட வேண்டியிருக்கிறது? இலங்கையிலும் இப்படியான [illegible] என்ன?

[10ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் எப்படி?

திருமலை வே. ரவீந்திரன்

## மேஷம்

இனப்பூசலின் மூலம் இதய பாரம் ஏற்படும். எதையும் தாங்கும் இதயத்துடன்செய லாற்றின் நிலைமையைச் சமாளிக்கலாம். ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாரராளமாகக்கிடைக்கும். தாய்வழிமூலம் நற் செய்திகிடைக்கலாம் எதிர்பாராத விருந்திற்கும் இட மேறபடும்.

## ரிஷபம்

மேடைப்பேச்சாளர் இன்று பெரும் புகழ்அடைவர். இன பந்துக்களின் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு. பொதுவாகவாழ்க்கையில் முன்னேற்றம்உண்டு நெருங்கிய உறவுனர் ஒருவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவிற்கும்இடமுண்டு. நிதானம் வேண்டும்.

## மிதுனம்

பேராசைமூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள். இதனுல் விபரீதங்கள் தோன்றக் கூடும். மறைமுகமான எதிர்ப்புகளும் தோன்றும். முன்னெச்சரிக்கைநன்று. விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத்தரும். எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும் பொறுமைவிரும்பதக்கது.

## கடகம்

கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின்ஆதரவைப் பெறுவர். ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். பிறர்ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தாய்வழியால் நற்செய்தியும் கிடைக்கலாம்.

## சிம்மம்

பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படும். வருமானத்தில் திருப்திகரமான நிலைதென்படும். அமைதியான நடவடிக்கைகளின் மூலம் மற்றவர்களின் நட்பைபெறுவீர்கள். புதியமுயற்சிகளில் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள் புத்திரர் வழியாலும் புதினம்கிடைக்கும். புதுமையான எண்ணங்களும் உருவாகும்.

## கன்னி

ஆமைவேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின்சூழ்ச்சி பலமாகஇருக்கிம். காணித்தொல்லையினுல் கடன்படவும் நேரும். நீண்டநாள் உறவில்முறிவுஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவைத் தவிர்த்துக் கொள்ளவும். சமயோசிதபுத்தியினுல் எதையும் சமாளிக்கலாம்.

## துலாம்

காதலர்களுக்கு கன குஷியான தினம். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். களஸ்திர வழியால் நன்மையுண்டு வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சிய வாதிகள் பூரிப்படைவார்கள். குடும்பத்தில் குதூகலமான சம்பவங்கள் இடம் பெறும். பொதுவாக மன நிறைவுக்கு இடமுண்டு.

## விருச்சிகம்

வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும். நண்பர் ஒருவர் காலை வாரிவிடக்கூடும். சிந்தனையை ஒரு வழிப்படுத்திச் செயலாற்றவும். பண விடயத்தில் அதிகம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும். முன் யோசனையுடன் செயலாற்றவும்.

## தனுசு

பொதுத் துறையில் நாட்டம் ஏற்படும். பிதா வழியால் ஆதரவும் உண்டு. கொள்கை வழியில் வாழ்க்கையை அமைப்பதில் மகிழ்ச்சி அடைவீர்கள். பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு சிலருக்கு உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

## மகரம்

சிறிய விடயத்திற்குக்கூட அதிக ஆத்திரம் ஏற்படலாம். பல வழிகளாலும் பணம் செலவாகும். எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். சிலர் அவப்பெயருக்கும் இலக்காகலாம். மனதில் புதிய எண்ணம் வட்டமிடும். உல்லாசப் பயணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.


## கும்பம்

ஏமாற்று வேலைகள் இடம் பெறும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். குடும்பத்தில் அமைதி குன்றும். நன்குக ஆலோசித்தபின்பே எந்த நடவடிக்கையையும் எடுக்கவும். பிள்ளைகளின் நடவடிக்கை பெருமையைத் தேடித்தரும்.

## மீனம்

சிந்தனை சிலந்தி வலைபின்னும். தனிமையைப் பெரிதும் விரும்புவீர்கள். கடமையில் தளர்ச்சி காணப்படும். எதையும் அலசி ஆராயவிரும்புவீர்கள். உறயினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும். நல்ல வாரம்.


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் மதிய போசனம் Buffet Lunch-ரூபா 50/- மட்டுமே
- எமது விசேஷமான ஐஸ் கிறீம்வகைகள் :

| | | |
|---|---|---|
| வனிலா | ½ கலன் | ரூபா 60/- |
| ஸ்ரோபரி | ½ கலன் | ரூபா 60/- |
| சொக்லேட் | ½ கலன் | ரூபா 70/- |

குளிருடன் கொண்டுசெல்லக்கூடிய (Rigifoam) பெட்டிகள் Rs. 50/- டிபொசிட்

- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை

(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)

குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-

குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-

பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாம் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூமிகா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


## அச்சுவேலி தம்பிமுத்துவுக்கு இலண்டனில் அஞ்சலி

(9ம் பக்கத் தொடர்ச்சி)

### 'சிலுக்குகள்' சேற்றில் மல்லுக் கட்டுவதைப் பார்க்க இளவரசருக்கு வந்த ஆசை

மகாராணி எலிஸபெத்தின் குமாரரான இளவரசர் எட்வர்ட் தீராதவிளையாட்டுப் பிள்ளை என்றுபெயர் எடுத்தவர்.

இவருக்கு கடைசியாக வந்தஆசையைப்பற்றி ''சன்'' பத்திரிகை சொட்டைஎழுத்தில் செய்திவெளியிட்டது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் விரைவில் நடைபெறப் போகும்முழு இரவுக்களியாட்ட விழாவில் மங்கையர் மல்யுத்தமும் ஒருஅம்சமாகும். இதுசாதாரண ஒருமல்யுத்தம் அல்ல. இதில்இரு விசேஷ அம்சங்கள்உள்ளன. முதலாவது அம்சம், மல்லுக்கட்டும் அணங்குகள் அடிப்படைவெட்கத்தை மட்டும்மறைக்கக் கூடிய அளவுஅவசியமான துகிலுடன் கோதாவில் இறங்குவர். இரண்டாவது அம்சம், இந்தமல்யுத்தக் கோதா சேறு நிரப்பப்பட்ட ஒரு அரங்காக இருக்கும்.

இந்த மல்யுத்தத்தை அரங்கின அருகில் இருந்து பார்வையிடுவதற்காக ரூபா (இலங்கை) 3350 பெறுமதியான இரு டிக்கட்டுகளை இளவரசர் விலை கொடுத்து வாங்கியுள்ளாராம் இளவரசருடன் கூட வரப்போகும் பார்வையாளர் யாரென்று தெரியவில்லை.

இளவரசரின் மல்யுத்தப் பிரியம்தான் என்னே!

இத்தைகய மல்யுத்தங்களை இலண்டன் நகரின் மாநகராட்சியைக் கைப்பற்றியுள்ள தொழிற் கட்சியினர் ஆபாசமானவை என்ற பெயரில் தடை செய்துள்ளனர் என்பதும், கேம்பிறிட்ஜ் லண்டன் நகருக்கு வெளியே உள்ளது என்பதும், குறிப்பிடத்தக்கது!

### அரச குடும்பத்தினரின் அந்தரங்கம் ஊமையாக்கப்பட்டது!

பிரிட்டிஷ் அரசகுடும்பத்தின் அந்தரங்கம் ஊமையாக்கப்பட்ட வரலாறு அண்மையில் நடைபெற்றது.

அன்ட்றூலைட்லூட் என்ற சமையல்காரர் எலிசபெத்மகாராணியின் கீழ்நான்குவருடம் பக்கிங்ஹாம் அரண்மனையில் கடமையாற்றினுர். இதன்பின் ஆனின்வீட்டில் சமையல்காரராக கடமையாற்றி, கடந்த நவம்பர் தனதுவேலையை இராஜினுமா செய்தார்.

இராஜிஞமா செய்தவுடன் ''ஒருமகாராணியின் சேவையில்'' என்றதலைப்யில் 600 பக்கங்கள்கொண்ட ஒருநூலை பிரசுரிக்கத் தயாரானர்.இந்த நூலில் அரசகுடும்பத்தினரின் அந்தரங்கவாழ்க்கை பற்றிய சுவையான பலதகவல்கள் இருந்ததாம்.

இளவரசி ஆன்உடனடியாக கோட்டுக்குச் சென்று, அரச குடும்பச் சேவையில் அன்ட்றூ இருந்தபோது பெறப்பட்ட தகவல்கல் எதையும் பிரசுரிக்கக்கூடாது என்று தடையுத்தரவு வழங்கினுர். நீதிமன்றமும் தடையுத்தரவை அனுமதித்தது.

அந்தரங்கம் ஊமையானது!

இப்போது தனதுநூலின் மூலப்பிரதி திருடப்பட்டுவிட்டதாக அன்ட்றூ அறிவித்ததைஅடுத்து, ஸ்கொட்லண்ட் யார்ட் இரகசியப் போலீஸ் புலன்விசாரணை செய்துவருகிறது.

இலண்டனில் தடைசெய்யப்பட்ட இந்தநூல் சூரபத்மனின் தலைபோல, உலகின் வேறுஏதாவது நாட்டின் புத்தகமாக திடீரென்று வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உண்மைகள் ஊமையாவதில்லை!

# பாலைவனத்தில் பல ஆண்டுகள்

இருபது ஆண்டுகளுக்கு முன் மலாயா பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளராயிருந்தேன். அந்தப் பல்கலைக்கழக முறையில் ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு ஆண்டும் ஆராய்ச்சி செய்து இரண்டு கட்டுரைகள் பிரசுரிக்கவேண்டும். அக்காலத்தில் ஐக்கிய நாட்டு உணவு விவசாயப்பகுதி புள்ளிவிபர அதிபர் கலாநிதி சுகாத்மா உலக உணவைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியதை வாசித்தேன். இதைத் தொடர்ந்து மலாயாவின் உணவைப் பற்றி நானும் எழுதலாமென்று யோசித்து ஆறு மாதம் வரையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன். இதன் விளைவாக மலாயாவின் சத்துணவின் தரத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி லண்டன் புள்ளிவிபர சங்கத்திற்கு அனுப்பமுன் மரியாதைக்காக கலாநிதி சுகாத்மாவுக்கு அனுப்பினேன். ஏற்கனவே இவரை எனக்குத் தெரியும். அவரின் பதில் வந்தது. அக் கடிதத்தில் நல்ல கட்டுரையென்றும் சில குறிப்பையும் எழுதி இறுதியாக ஐ.நா. விலேச்சரும்படியும் கேட்டார். இக்கடிதம் கிடைக்கும் பொழுது இலட்சுமிதேவி கதவிலே தட்டுகிறாள் என்று நான் கனவிலும் யோசிக்கவில்லை. ஆனால் இலட்சுமி தேவி எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டாள். ஆறுமாத கடித போக்குவரவின் பின் சூடான் தேசத்திற்கு புள்ளிவிபர ஆலோசகராக ஐ.நா என்னை அனுப்பியது.

### சூடான்

### அனுபவங்கள்

மலாயாவில் இருந்து உரோமாபுரி சென்று எனது கடமைகள் என்ன என்பதை அறிந்தேன்.

சூடான் செல்லும் வழியில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒரு புள்ளிவிபர ஆலோசகருடன் எகிப்தில் ஒருவாரம் தங்கி அவர் செய்யும் வேலையைப் பார்க்கும்படியும் பணிக்கப்பட்டது. எகிப்து சேர்ந்ததும் பாலைவனத்திலும் அரபு மக்களுடனும் கடமையாற்றுவதன் கஷ்டங்களையும் அறிந்தேன். சூடான் சேர்ந்து சில வாரமாகியும் நான் தவறுதலாக வந்துவிட்டேனே என்று பல தடவைகள் கவலையுற்றேன். ஆனால் மாதம் முடிய வரும் சம்பளத்தைப் பார்த்தால் தொடர்ந்தும் கடமையாற்றும்படி மனம் சொல்லிற்று.

ஒரு புதுத் தொழிலுக்குச் சென்றால் முதல் நூறு நாள் மிகவும் முக்கியமென்று பலர் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். ஏதாவது புது எண்ணங்கள் வருவதாயிருந்தால் முதல் நூறு நாட்களில் வரும் என்பதுபலரின் கருத்து. இந்தக்காலம் கடந்தவுடன் வந்தவரும் சூழ்நிலைக்கு இடம் கொடுத்து புதுமுறைகளை கையாளமாட்டார். இதை மனதில்வைத்து முதல் மூன்று மாசமும் கடுமையாக உழைத்தேன். ஓரளவில் எனக்குமனத் திருப்திவந்தாலும் போதிய செல்வாக்கு கிடைக்கவில்லை. இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்த பொழுது அவ்வூர்ப் பல்கலைக் கழகத்திற்கு சென்றேன். கணிதத் துறை, புள்ளிவிபரத் துறை பேராசிரியர்களைச் சந்தித்தேன். அவர்கள் வாரம் ஒரு முறை ஒவ்வொரு துறையிலும் விரிவுரை கொடுக்குமாறு கேட்டார்கள். ஐ.நா உத்தரவுடன் பணம் வாங்காமல் கௌரவப் பேராசிரியராக வாரம் இரு முறை விரிவுரை கொடுத்தேன். இது என்னைப்பிரபலமடையச் செய்தது. சூடானில் உள்ள பெரிய குடும்பப் பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் படித்ததால் இவர்களைச் சந்திக்கவும் அவர்கள் என்னுடைய விரிவுரைகளைக் கேட்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. பல்கலைக்கழகம் என்னை மதிக்கவே அரசாங்கமும் என்னை மதித்தது; ஐ.நாவும் மதித்தது இந்த அனுபவத்தின் பின் எத்தேசத்திலும் ஐ.நா. வுடன் கடமையாற்றும் பொழுது அந்தந்த தேசத்து பல்கலைக்கழகத்தில் கௌரவப் பேராசிரியராகக் கடமையாற்ற நானே முன் வந்து ஒழுங்குகளைச் செய்தேன்.

இதை இங்கே ஏன் எழுதுகிறேன் என்றால் இளைஞர்கள் இந்த அனுபவத்தால் பலன் அடைவார்கள் என்று. தனி உழைப்பு உபகாரம் கொடுக்காவிட்டால் வேலையை ஒழுங்காக செய்து கொண்டு வேறு திசைகளில் பார்த்தால் புது எண்ணங்கள் தோன்றும் இப்படிப் பார்த்தபொழுது எனக்குப் பல்கலைக்கழகத்தின் மூலம் பலன் கிடைத்தது இன்னுமொரு பலன் தரும் விடயம் விருநதுபசாரம்.

**நா. மாணிக்கஇடைக்காடர்**

### விருந்தோம்பல்

### கலையின் மகத்துவம்

ஐ.நா வட்டாரங்களிலும் பல நாட்டுத் தூதுவர் வட்டாரங்களிலும் விருந்துபசாரம் ஒரு கலையாகிவிட்டது. எங்களுடைய கடமையைச் செவ்வனே செய்வதற்கு யார் தேவையோ அவர்களை இடையிடையே வீட்டுக்கு அழைத்து விருந்து அளிக்கவேண்டும். இதனால் பரஸ்பர நம்பிக்கை வளரும். தன் தன் கடமையை இன்னும் செவ்வனே செய்யலாம். நானும் எனது மனைவியாரும் என் கடமையுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் மாத்திரமல்ல, எங்களுக்கு அந்த நாட்டு வாழ்க்கைக்கு யார் யார் உதவி தேவையோ அவர்களையும் அடிக்கடி வீட்டுக்கு அழைப்போம். உதாரணமாக நாங்கள் சுகயீனத்திற்குச் செல்லும் வைத்தியருடன் ஒரு குடும்ப சிநேகிதன் என்ற முறையில் பழகிக் கொள்வோம். அவசரமாக இலங்கைசெல்ல வேண்டுமென்றால் விமானபயணத்திற்கு எவர் உதவிதேவையோ இவரையும் குடும்பத்தையும் விருந்துக்கு சேர்த்துக்கொள்ளுவோம். கந்தோரில்தீர்க்க முடியாத பிரச்னைகளை விருந்துகளில் தீர்த்துக்கொள்வோம்.

இந்தவிடத்தில் ஒரு சம்பவத்தை கூறவிரும்புகிறேன். இந்தோனிஷியாவில் கடமையாற்றும் பொழுது ஒருபெரிய அரசாங்கக்கூட்டத்தில் இந்தோனிஷியாவின் அரிசிஇறக்குமதியைப் பற்றிபுள்ளிவிபரம் கேட்டார்கள். அதற்குநான் இறக்குமதிசெய்யும் இலாகாவிற்கு தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு அறியுங்களென்றேன். அப்படியே புள்ளிவிபர அதிகாரிஒருவர் இறக்குமதி இலாகாவை அணுகிக் கேட்டபொழுது அவ்வாண்டுப்புள்ளிவிபரம் அரசாங்கஇரகசியம் ஆகையால் சொல்ல முடியாது என்றார். அதிகாரி இம்மறுமொழியைக் கூறியதும் எல்லோரும் என்னைப்பார்த்தார்கள். நான்தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அறிந்துமுழுவிபரமும் கொடுக்காமல் ஓரளவுக்குத்தேவையான புள்ளிவிபரத்தைக் கொடுத்தேன். கூட்டம்முடிந்ததும் புள்ளிவிபர அதிபர் நாங்கள் இந்தோனிஷியர் ஒருவருக்கொருவர் அறியமுடியாத புள்ளிவிபரத்தை வெளியேயிருந்துவந்த உங்களால் எப்படி அறியமுடிந்ததென்றார். இந்தநாட்டினின்றும் நான்மாறிப் போகும்பொழுது சொல்லுகிறேன் என்றுகூறி தப்பித்துக்கொண்டேன். உண்மை என்னவென்றால் ஐ.நா.விற்கு அரிசிஇறக்குமதி புள்ளிவிபரம் தேவையாகையால் இறக்குமதி இலாகாவில்

(12ம் பக்கம் பார்க்க)

# ஈழம்தந்த அம்மானை

## என்னும்

# அருந்தமிழ் இலக்கியம்

தமிழிலக்கியத் துறையில் பிரபந்தங்கள் என்னும்படைப்புக்கள் தொண்ணூற்றுறு வகையாக உண்டாகி வளஞ்செய்துள்ளன பள்ளு' உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலியன போல அம்மானை என்பதும் ஒன்று. அம்மானை ஒரு வித விளையாட்டாகும். அதுவும் மகளிர் மூவர் அம்மானைக் காய்களைக் கையிலெடுத்து எற்றியும், எறிந்தும், ஏந்தியும் தாளத்துக்கு அமைய துள்ளியாடும் போது பாடும் ஒரு வகைப்பாடல். அது அம்மானை வரி என வழங்குகின்றது. மகளிர் ஆடும்போது, ஒருத்தி ஒரு செய்தியையோ, கருத்தையோ வெளியிடும் போது, ஒருத்தி அதிலே ஒரு சந்தேகம் கிளப்புவாள். மூன்றுமவள் சமாதானம் கூறிப் பாடலை முடிப்பாள். இத்தகைய பாடல் சிலேடை நயம் பொருந்தியதாகவும் அமையும்.

சிலப்பதிகாரத்தில் பழைய அம்மானைப் பாடல்கள் உண்டு. இருபாலைச் சேனுதிராயர் பாடிய பாடல் ஒன்று நல்லூர்ப் பெருமானை நயமாகக் கிண்டல் செய்து போற்றுகிறது. பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தில்; அம்மானைப் பருவம் .என்பதும் ஒன்று. கலம்பகம் என்னும் பிரபந்த அமைப்பில் அம்மானை என்பதும் ஓர் அங்கம். இங்ஙனம் பாரம்பரியமாகப் புகழ் பெற்றுத் தமிழ்நயம் பரப்பி வந்த அம்மானை ஈழத்துத் தமிழ் தந்ததாதாக்கள் புலமையில் நல்ல திருப்பம் அடைந்துள்ளது.

இலங்கைக் கரைநாடுகளைப் போத்துக்கேயர் 1621—1658 வரை ஆட்சிசெய்தகாலத்தில் எழுந்த இலக்கியங்களுள்ஒன்று அர்ச்யாகப்பர் அம்மானை. இதற்குப்பின் கஞ்சன்அம்மானை, திருச்செல்வர்அம்மானை என்னும்நூல்களும் வெளிவந்துள்ளன.

அம்மாஎன்னும் முதல்தமிழ்ச்சொல் தாயைக்குறிப்பது. தாயைக்குறிக்கும் அம்மானை என்னும்பதம் பாடல்களில் பயின்றுவரும் ஒருவகைப் பிரபந்தம் அம்மானைஎன வழங்குகின்றது.

### அர்ச்சயாகப்பர்

### அம்மானை

சந்தியோகுமையூர் அம்மானைஎன்னும் பெயர்பெற்ற இப்பிரபந்தம், தென்மராட்சியில் கிளாலிஎன்னும் ஊரில் கோயில்கொண்டுள்ள செண் யேம்ஸ்பெரியவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டதாகும். செண்யேம்ஸ்பெரியவரை சந்தியாகு என்றும், யாகப்பர் எனறும் கத்தோலிக்கமக்கள் வணங்குவர். வணக்கத்துக்குரியசெண்யேம்ஸ் வீரர் முன்னர்ஐரோப்பாவில் நடைபெற்ற பெரியமதப் போரில் வெள்ளைக்குதிரை யேறிவீரப்போர் செய்துவெற்றியிட்டியவர். அவருடைய வெற்றிக்குஉதவியாக நின்றது வெண்குதிரை.

இங்ஙனமாக யாகப்பரின் திருவுருவம் வெண்குதிரையில் ஏறியவண்ணத்தில் பொன்வாளும் பொன்னுபரணங்களும் பொலிய முன்னுளில் கிளாலியில் இருந்தது. இந்தவண்ணத்தை அந்நாளில் தேரிலேற்றித் திருவிழாவுஞ் செய்தனர். இப்பெரியவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிரபந்தம் பாடுமாறு கத்தோலிக்க குருவான சுவாம் கறுவால் லூயிஸ் சுவாமிகள் கேட்டுக் கொண்ட வண்ணம், தெல்லிப்பழையூர் பேதுருப் புலவர் என்பார், சைவசமயச் சம்பிரதாயங்கள் பொலிய இந்நூலை அருமையாகச் செய்துள்ளார். இதனை அம்மானை என்பதிலும் பார்க்கக் காவியம்எனக் கூறலாம்எனக் கருதுவாரும்உளர்.

### நூலமைப்பு

யாகப்பர்அம்மானை ஐம்பத்தைந்து பகுதிகளை உடையது. அது யாழ்ப்பாணத்தின் சிறப்பு தெல்லிப்பழையின் பெருமையாதியன கூறியபின், பாட்டுடைத் தலைவனின் ஊரையும் அவ்வூரவரின் பண்பாட்டையும், கிறிஸ்துநாதர் செய்த அற்புதங்களையும், யாகப்பரின் வீரப்போரையும் விரிவாகக் கூறும்.

இங்ஙனம்கூறும் போது சைவாகமசம்பிரதாய பதங்களைத் தாராளமாகக் கையாண்டுபாடும், தமிழரின் இயற்கைவளம் பூக்கள், பறவைகள், சம்பிரதாயச்சடங்குகள், மங்களச்செயல்கள், வாத்தியங்களையும்கூறும். 'மநுநீதியோது திருநகர், மந்தாரம் பிச்சிமயிலை மருக்கொழுந்து நந்தவனங்கள் நறைவீசும்பூஞ்சோலை, பொட்டிட்டுக் குங்குமத்தால் போந்தநல்ல கோலமிட்டு கூறுங்கருவியுடன் கொம்பு தவில்முழங்க, சொடிபடையும் பம்பையும்சூழப்பவள மணித் தேரேறி'' என்றெல்லாம் பாட்டுடைத்தலைவன் பவனி வந்ததை நாம்அகக்கண்ணால் கண்டு வணங்கும்வகையில் பாடியுள்ளார். பாடியகாலம் 1647 என்பதைப் பாயிரச் செய்யுள்பாடுகிறது. 'ஆண்டு ஆயிரமுப் அறுநூறும் ஏழொழும் மீண்டும் உரைக்கும் ...

### தமிழ் தந்த தாதாக்கள்

**க. சி. குலரத்தினம்**



# எம். ஜி. ஆர். பேசுகிறார்

- 'ஐயா'

- உள்ளத்தில் இலட்சியத்தைவைத்துக்கொண்டால் இறுதிவரை அதற்காகப் பாடுபட வேண்டும்.
- என்வாழ்கையில் அறிவு வந்த பருவம்முதல் இன்று வரை போராட்டமாகவே இருக்கிறது.
- ஒரு தொழிற்சாலைமூலம் பத்தாயிரம்பேர் பயனடைகிறார்கள் என்றால், அதனைஒரு ஆலயம்என்று கூறுவது பொருத்தமானதுஎன்றே கருதுகிறேன்.
- நீதித்துறையில் அரசியல் கட்சிநுழைந்தால் நீதி செத்துவிடும்.
- பணத்தைச் சேர்த்து வைத்தால் அது எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் என்றுசொல்ல முடியாது.
- மனிதனுக்குத் திறமை மட்டுமிருந்தால் போதாது. சந்தர்பத்தைப் பயன்படுத்தும் நுண்ணறிவும் வேண்டும்.
- தொழிலாளிக்கு வேலை இல்லையென்றால நாடு சுபிட்சமாக இருக்காது.
- சக்தி குறைந்தவர்களிடம் வீரம்காட்டுவது சரியல்ல.
- தனக்குச்சாதகம் என்றால் அந்தத்தீர்ப்பை ஏற்றுக் கொள்வது; பாதகம் என்றால் அதனைத்தீயிட்டுக் கொழுத்துவதுஅது என்ன நியாயம்?
- அரசே எல்லாக்காரியங்களையும் செய்துவிடுவது என்பது முடிகிறகாரியமல்ல. வசதிபடைத்தவர்களும் ஆற்றல்மிக்கவர்களும் நல்லபணிகளை மேற்கொள்ளவேண்டும்.
- இப்போது எங்குபார்த்தாலும் நெஞ்சுவலி, இதயவலி, சக்கரைவியாதி, உப்புவியாதி என்கின்றனர் காரணம் உடல் பயிற்சிஇல்லாததுதான்.
- பணக்காரர் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு வேட்டி -சேலை எடுத்துக்கொடுத்தால் ஏழைக்கு வேட்டி -சேலை இல்லையென்ற நிலையே வராது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகைசுற்றிவரும் பிரெஞ்சு இளைஞர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

### பலஸ்தீனர்கள் பயங்கரமானவர்கள்

எகிப்துவந்துசுயஸ்கால்வாய் வழியே இஸ்ரேல்சென்றார் லியபொட். ''தென்ஆபிரிக்காவில் கறுப்பர்கள் அசிங்கமானவர்கள் என்று ஒதுக்கப்படுகிறார்கள். இஸ்ரேலில் பாலஸ்தீனியர்கள் பயங்கரமானவர்கள் என்று ஒடுக்கப்படுகிறார்கள். பலஸ்தீனர்களால் முழு உலகுக்குமே அபாயம்என்று கூறுகிறார்கள். இஸ்ரேலியர்கள் நான்அங்கு நின்றபோது இஸ்ரேலின் லெபனான் ஊடுருவல் இடம் பெற்றுக்கொண்டிருந்தது. வீதிகளில் பயங்கரமான கனரகஇராணுவ வாகனங்களுடனும், போர்விமானங்களுடனும் இஸ்ரேலிய இராணுவம் நகருவதைக்கண்டேன். ஒருசிறு மக்கட்கூட்டத்தை இப்படி அசுரத்தனமாக அதுஒடுக்கச் செல்வதைக் கண்டபோது மிக வேதனையாகவே இருந்தது'' என்றார்லியபொட்.

ஈராக்-ஈரான் ஆகியவற்றைக் கடந்து பாகிஸ்தான் ஊடாக இந்தியாவந்துள்ளார். ஈரான்-ஈராக் யுத்தத்தில் இறங்கியிருப்பதால் அங்குதாம் நெடுங்காலம் நிற்கவில்லை என்றுகூறினார். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பரவலாகஇவர் பயணம்செய்துள்ளார். தமது பயணத்தின் ஆரம்பத்திலிருந்து கொண்டு வந்தஒரு 'கமெரா' வைத்தான் இந்தியாவில் பறிகொடுத்ததாகக்கூறினார். தமிழ்நாட்டிலிருக்கும்போது யாழ்ப்பாணத்தைப்பற்றியும் இங்குள் தமிழர்கள் பற்றியும் வேதனை தரும் பல தகவல்களைதாம் அறிந்ததாகக்கூறினார்.

இலங்கைப்பயணத்தை முடித்துக்கொண்டதும் தென் கிழக்காசியா, ஆஸ்திரேலியா, ஜப்பான்சென்று அங்கிருந்தும் ரஷ்யாவின் கிழக்குஅந்தத்திலிருந்து சைபீரியா ரயில்பயணம்மூலம் (Trans siberian railway-உலகில் மிகநீண்ட ரயில்சேவை) ஐரோப்பா வந்து தனதுபிரயாணத்தை பூர்த்திசெய்ய இவர்திட்டமிட்டுள்ளார்.

### உயிர்வதையை வெறுத்தேன்

''இதுவரைஉங்கள் பயணத்தின் மூலம் நீங்கள்உணர்ந்தவை ஏதும்?'' என்றுவினவினேன். ''நான் இப்பயணத்தை ஆரம்பிக்குமுன்னர் மாமிசம்உண்பதுண்டு. உலகின் அழகையும் அதிலுள்ளஜீவராசிகளின் வாழ்க்கையையும் நேரடியாகக் கண்டபோது உயிர்வதையை வெறுத்தேன். தற்போதுநான்ஒரு வெஜிடேரியன் (Vegetarian) அசைவ உணவுகளைஉண்பதில்லை.

### அழகைஅனுபவிக்க முடியாதவர்கள்

இயற்கையுடன் சேர்ந்து வாழ்வதன் சிறப்பைஉணர்ந்துள்ளேன். மகிழ்ச்சியான உயர்ந்தவாழ்வுக்கு இயற்கை வழங்குபவையே செயற்கையானவற்றைவிட சிறந்தவை என்பதைஉணர்கிறேன்.

உலகில் பலஅழகியஅம்சங்கள் உள்ளன. அவற்றை அனுபவிக்கத் தெரியாதவர்களே போர், பூசல்கள் என்றுஇறங்குகிறார்கள்'' என்றுகூறிய கிய் லியபொட் அமைதி, கட்டுப்பாடு, பொறுமை, அவதானம் ஆகியபண்புகளைத் தாங்கிய தனதுமெலிந்த உயர்ந்த உருவத்துடன் என்னிடமிருந்து விடைபெற்றார். மிகுதிப்பயணத்தையும் வெற்றிகரமாக முடிக்க வாழ்த்தியனுப்பினேன் அவரை.

# மிஃறுஜ் புனித இரவில் உள்ளத்தைத் தூய்மை செய்வோம்

இன்று நம்மவர்களில், சிலர் மிஃறுச் என்றால் என்னவென்று அறியாதவர்களாக இருக்கிறார்கள். இஸ்லாமிய சரித்திரத்தில் மிஃறுச்சம்பவம் மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றது. நமது இறைவணக்கத்தின் முக்கியதூண்களில் ஒன்றான தொழுகைக்கு அடிப்படையே இந்தமிஃறுச்சம்பவமாகும்.

வானத்து நட்சத்திரங்கள் பொன்றவர்களான இப்பூவுலகில் தோன்றிய நபிமார்களில் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இறுதிநபியாகத் தோன்றிய போதிலும் அவர்கள் அனைவருக்கும் தலைமைஸ்தானம் பெற்றவர்களாகவிளங்கி வருகின்றார்கள். அந்த நபிமார்கள் அனைவருக்கும் அல்லாஹ் பல அற்புதங்களை அளித்திருந்தான். முன்தோன்றிய நபிமார்களின் மறைவுக்குப்பின் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் அவர்களின் நினைவுச்சின்னங்களாக விளங்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவில்லை ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவன் அருளிய அற்புதங்களிற்பல இன்றும் அன்னாரின் நினைவுச்சின்னங்களாக, உலக மக்களுக்குரிய பலபடிப்பினைகளைத் தமக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருப்பவைகளாக, இறைவனின் இணையில்லா வல்லமைக்கு எடுத்துக் காட்டுக்களாக அமைந்தருக்கின்றன.

எமது ரஸுலேகரீம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அளித்த தனிப்பெரும் சிறப்புமிக்க அற்புதங்களில், அன்னாரின் விண்ணுலக யாத்திரை குறிப்பிடத்தக்கது இஸ்லாமிய இலக்கியங்களில் இதனை ''இஸ்ரா'' என அழைக்கப்படுகிறது. இதனையே பொதுவாக மிஃறுச் என அழைக்கிறோம். காலத்தால் மாறாத, மாளாத, காலத்தின் ஏலத்தில் மலியாத காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்த உண்மைகளை ஞால மக்களுக்கு வாரிவழங்குகின்ற இறைமறையாம் திருமறையின் இரண்டு அத்தியாயங்களில் மிஃறுச்குறித்து இறைவன் கூறுகிறான். ஒன்று இம்ரானுடைய சந்ததிகள்; மற்றது, நட்சத்திரங்கள். வானத்தில் நட்சத்திரங்கள் இத்தனைதான் என்று எப்படி வரையறுத்துக், கூறமுடியாதோ அப்படித்தான் அண்ணலாரின் மிஃறுச்தத்துவம் பற்றியும் ஒருவருக்கும் வரையறுத்துக் கூற முடிவதில்லை. என்றாலும் காலத்திற்குக்காலம் மனித குலத்தை ஆத்மீக ஞானப் பாதையில் வழிநடத்தும் மேதைகள் அவ்வப்போது பெருமானாரின் மிஃறுச்பற்றி விளக்கம்தந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்தப்புனித மிஃறுச் எனும்சம்பவம் நபித்துவத்தின் பன்னிரண்டாம் ஆண்டில் ரஜப்மாதம் 27ம் நாள் இரவு நடைபெற்றது. ''புராக்'' எனும் வாகனத்தில் ஜிப்ரீஸ் (அலை) அவர்களோடு நபிகள் நாயகம் இவ்விண்ணுலக யாத்திரையை மேற்கொண்டார்கள். இப் 'புராக்' எனும் வாகனம் மின்னல்வேகத்தில் செல்லக்கூடியது. அவர்கள் ஏழுவானங்களையும் கடந்து, பலஆயிரம் திரைகளையும் கடந்து அல்லாஹ்வின் அர்ஷைசென்றடைந்தார்கள். செல்லும் வழியில் சுவர்க்கம் நரகம் போன்றவற்றையும் அங்கு நிகழ்பவற்றையும் அறிந்து கொண்டார்கள். மேலும் முன்னைய நபிமார்களான ஆதம் (அலை) நபி யூசுப், காஷத்நபி, சுலைமான் நபி, இபுராஹிம் நபி, மூஸாநபி போன்றவர்களையும் அவர்கள் சந்தித்தார்கள். இவ்விண்ணுலகயாத்திரையில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு ஐம்பது தொழுகைகள். கொடுக்கப்பட்டன. பின் மூஸா நபி அவர்களின் தலையீட்டின் காரணமாக அவை இறுதியில் 5 ஆக ஆக்கப்பட்டன.

மிஃறுச், இஸ்லாத்தில் மகத்துவம் வகிக்கும் ஒரு தெய்வீக சம்பவம். அதில் மக்கள் தெரிந்து செயல்புரியத்தக்க படிப்பினைகள் பல காணப்படுகின்றன. மிஃறுச் காட்சிகள் இருபத்தைந்தாக அமைந்திருப்பது போலவே அது தரும் படிப்பினைகளும் இருபத்தைந்தாக அமைந்திருக்கின்றன. இந்தப்புனித [illegible] மனதிற்கொண்டு செயல்பட வேண்டும்.

இந்த மிஃறுச்பற்றிய செய்திகளையும் அவற்றில் அடங்கியிருக்கும் தத்துவங்களையும் ஸவஹாபாக்கள் அப்படியப்படியே ஒப்புக்கொண்டு அக்கால மக்களுக்கு எடுத்தியம்பினர். அவர்கள் காலத்திற்குப் பின் இஸ்லாமிய மேதைகள் ஹதீதுத்கிரந்தங்களில் காணப்பட்ட மிஃறுச் சம்பந்தப்பட்ட நபி மொழிகளையும் ஸஹாபாக்களின் அறிவிப்புக்களையும் ஒன்றுதிரட்டிப் பல தனி நூல்களாக பல மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. அவற்றை நாமும் வாசித்து பயனடைவேமாக இந்தபுனித மிஃறுச் தின இரவில் பல நற்கிரியைகளிலும் ஈடுபட்டு எமது உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்போம்.

**இன்று ஞாயிற்றுக் கிழமை மிஃறுஜ்தினமாகிறது.**

**முகம்மது சுல்தான் ஜினூஸ்**

## மையக்குறி

[7ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டது.

அவர் உள்ளே சென்றார். சிறு பெட்டியுடன வெளியே வந்தார்;

மனைவி ராசாத்தியம்மாள் வெளிப்படலை வரை வந்து வழி அனுப்பினாள்.

விருந்தைப் படியில் சிவக்கொழுந்தி ஊத்தை உடுப்புடன் நின்று பார்த்துக் கொண்டிருக்க, சோமரின் மூத்த பெட்டை ''ஐயா போட்டு வாருங்கோ!'' என்று கைகாட்டிக்கொண்டிருந்தாள்.

சோமர் றிக்சோவில் ஏறிவிட்டார்.

ஆயிரத்து எழுநூற்றுமூன்று வேட்டி' ஆரணியசால்வை, அணில்மார்க்கு பெனியன் ஆகியவைகளினால் மூடப்பட்ட பண்டாரி றிச்சோவை இழுத்துச் சென்றுகொண்டிருந்தான்.

(தொடரும்)

## சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அறியுமளவிற்கு என்னைப்படிக்கவைத்துவிட்டீர்கள். அது ஒன்றே போதும்எனக்கு. பட்டினித்தீயில் வெந்துகொண்டேபடிக்கலாமென்று நான் கருதவில்லை. காலையில் அம்மாவுக்கு மயக்கம் வந்தபோது எல்லோருமேகதறிவிட்டோம். இந்தப்பட்டினித்தாக்கம் இப்படியே தொடர்ந்தால் எங்கே ஒருவேளை நாமெல்லாம் தாயில்லாப்பிள்ளைகளாகிவிடுவோமோ என்ற அச்சம் என்னை உழைக்கத்தூண்டிவிட்டது. எங்கள்பஞ்சத்தை விரட்ட உழைப்பொன்றைத் தவிர வேறுஎதுவுமே எனக்குத் தெரியவில்லை கந்தசாமி அண்ணரோடு வன்னிப்பகுதிக்கு அருவிவெட்டச் செல்லுகிறேன். அம்மாவும் தங்கை தம்பிகளும் சுந்தரமாமா வீட்டில் இருக்கிறார்கள். உங்கள் கனவுகளுக்கு நான் இடையூறு செய்துவிட்டதாகநீங்கள் கருதினால் என்னை மன்னித்துவிடுங்கள்''- அன்புமகன். சுதர்சன்.

கடிதமும் கையுமாகச் சுந்தரம் வீட்டைநோக்கி ஓடினான் சண்முகம்.

(யாவும் கற்பனை)

## பாலைவனத்தில் பல ஆண்டுகள்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநண்பனை தேடிக்கொண்டேன். அவர்ஒருநாள் வீட்டுக்குவந்து இரண்டுமணித்தியாலத்தில் தனதுஅதிபர் ஒரு விடயத்தையிட்டு (Report) எழுதித்தரச்சொன்னார். இப்படிச் செய்யாவிட்டால் தன்னை தண்டனைக்குள் ஆக்கிவிடுவாரென்றார். நான் இவருடன் சேர்ந்து அந்தகுறிப்பை எழுதிக்கொடுத்தேன். இதன்பின் இறக்குமதியைப் பற்றிஎந்த இரகசியபுள்ளிவிபரமும் இவரிடமிருந்துநான் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தது. ஆனால் இந்த உத்தியோகத்தருக்கு பாதகம் விளைவிக்காமல் தான் கிடைத்த புள்ளிவிபரத்தை உபயோகிப்பேன். யார்எங்கள் கடமைக்கு உதவுவாரோ அவரின் நட்பைதேடிவளர்க்க வேண்டும். இதுநல்லநட்பாக மாறினால் வள்ளுவர்கூறியவாறு ''முகநகநட்பதுநட்பன்று, அகநகநட்பதேநட்பாம்'' ஒருநிரந்தர நட்பாகலாம்.

மீண்டும்சூடானுக்கு வருவோம். இந்தநாட்டு மக்களின் வாழ்க்கையில் என்னநல்லஅம்சங்கள் உள்ளன அவைஎமக்கு பலன் தருமாவென்று பார்ப்போம். முதலில் இவர்களில் மெச்சக்கூடியது குடிதண்ணீர் எல்லோருக்கும் சொந்தம் என்றபண்பு. பாலைவனத்தில் பெறுதற்கரிய பொருள்தண்ணீர். இதனால் தண்ணீரை பொதுப் பொருளாக்கிவிட்டார்கள். நாங்கள்ஒருவண்டியில் பாலைவனத்தில் சென்றோம். ஒருகிராமத்தில் நிற்பாட்டிவிட்டு சிறுநேரம் சுற்றிப் பார்த்தோம். அப்பொழுது யாரோஎங்கள் வண்டியில் இருந்ததண்ணீரை அருந்திக்கொண்டிருப்பதைக் கண்டேன். அப்பொழுதுஎனது சூடான்நண்பரை இதுஎன்னவென்றுகேட்க அவர்இதுதான் இந்நாட்டுமுறை எவரும் யாருடையதாயிருந்தாலும் தண்ணீரைக் குடிக்கலாம் மென்றார்.

உணவிலும் சில கோட்பாடுகள் உண்டு. ஒரு கிராமத்திலிருந்து பாலை வனத்தை தாண்டி சென்றால் அடுத்த கிராமத்தவர்கள் வந்தவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும் ஆனால் இதற்கு வரம்புண்டு. அதாவது இராவெள்ளிபட முந்திக் கேட்டால் கொடுக்கலாம, அல்லாவிட்டால் மறு நாள் காலை தான் உணவு கொடுப்பார்கள். ஒரு முறை அவசர அவசரமாக சிலர் பாலை வனத்தைத் தாண்டியும் மற்றக் கிராமத்திற்கு வர இராவெள்ளி பட்டுப்போய்வீட்டது. எனினும் இவர்கள் ஒரு வீட்டில் ஆட்களைக் கூப்பிட்டு உணவு கேட்டார்கள். அப்பொழுது இல்லத்தரசி கணவனிடம் இரா வெள்ளி இன்னும் ஆகாசத்திலிருக்கிறதா? என்று கேட்டாள். அதற்கு அவன் வந்தவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கருதி இப்பதான் பட்டுக் கொண்டு போகிறதென்றான். உடனே அந்தப் பெண்மணி உணவு கொடுக்கத்தான் வேண்டும் என்று கூறி புதிதாக சமைத்துக் கொடுத்தாள். கிராமங்களில் பொதுவில்பட்டினி கிடையாது. ஒருவரையும் பட்டினியாக கிராம மக்கள் விடமாட்டார்கள்.

(அடுத்த வாரம் முற்றும்)

நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச்சிட்டுக்களைப் பெறுவதில் உள்ள

☆ தாமதம் ☆ வீண்செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ்.நகரிலேயே உங்கள் பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச்சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY

To many parts of the world at Unbeatable Rates

தயினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

TFC

249 மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 23680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தப் பிரபஞ்சம் யாருக்கு வயப்படும்?

# சில கேள்விகளுக்கு சில பதில்கள்

குரு என்பவர் யார்?
உண்மையை அறிந்தவர். தன்மை அண்டிய சீடர்களின் நலனுக்காக இடைவிடாது பாடுபவர்.
தூயோன் எவன்?
எவன் உள்ளமும் மனமும் தூய்மையாக இருக்கின்றனவோ, அவன்.
பண்டிதன் எவன்?
விவேகி.
சம்சாரத்தில் சாரமாக இருப்பது எது?
அடிக்கடி இதை நினைத்துக் கொண்டிருப்பதேயாகும்: சம்சாரத்தில் சாரமேது என்று நினைத்துகொண்டேயிருந்தால் பற்று விட்டுப் பிறப்பு அறுக்கலாம்.
குருடன் யார்?
படித்திருந்தும் கெட்டகாரியம் செய்பவன்.
செவிடன் யார்?
இதத்தை கேட்காதவன்
அழகு எது?
சீலம்.
மதுவைப் போல மயக்கத்தை உண்டு பண்ணுவது எது? மாதர்
திருடர் எவர்?
இந்திரியங்களை இழுத்துச் செல்லும் விஷயங்கள்.
இந்தப்பிரபஞ்சம் யாருக்கு வசப்படும்?
பிரியமாகப் பேசக் கற்றுக் கொண்டு தருமத்தை அனுஷ்டிப்பவனுக்கு.
கோபம், கருமித்தனம்.
செல்வம் எது?
எதனால் விருப்பம் நிறைவேறுகிறதோ அதுவே.
ஐசுவரியம் யாருக்கு உண்டாகும்?
ஆண்டவனைப் பக்தியுடன் ஆராதிப்பவனுக்கு.
சாது யார்?
எவ்வேளையும் சந்துஷ்டியாக இருப்பவன்,
உடல் எடுத்தவனுக்குப் பெரிய பாக்கியம் எது?
ஆரோக்கியம்
யாருக்குத் தூக்கமில்லை?
கோபமுற்றவனுக்கு
சுகம் எது?
உள்ளத்தில் சிரிப்பு! பல் சிரிப்பல்ல
மனம் எவனுக்குக் கிடைக்கும்?
முயற்சி செய்பவனுக்கு
செய்யக்கஷ்டமானது எது?
மனத்தை இடைவிடாது தடுத்துக்கட்டிப்போடுவது
அவித்தை என்பதென்ன?
ஆத்மாவை மறப்பதே
யாருடைய சொல்பலிக்கும்?
சத்திய விரதம், மௌன விரதம், பொறுமை ஆகியவற்றை உடையவன் சொல்,
ஜன்மத்திற்குக் காரணம் எது?
விஷயத்தில் பற்று
சத்தியம் எது?
பரத்பிரம்மம்

## ஞானரசம்

சச்சி

குருடனிலும் குருடன் எவன்?
ஆசையுள்ளவன்.
சூரன் யார்?
துன்மார்க்கத்தில் மனம் போகாமல் அடக்குகிறவன் பெண்களின் பார்வைகளான பாணங்களால் அடிபடாதவன்
மதிப்புக்கு மூலம் எது?
எவனிடமும் எதையும் கேட்காமல் இருத்தல்.
சமர்த்தன் யார்?
பெண்களின் நடையால் வஞ்சிக்கப்படாதவன்.
விசனத்தைத் தருவது எது?
அசம்பாவம்.
வித்வான்களின் மனத்தைக் கவர்வது எது?
நல்ல கவிதையும் புத்தி என்னும் பெண்ணும்.
லக்ஷ்மி யாரை விரும்புவாள்?
சுறுசுறுப்புள்ள சித்தம் உடையவனை, நீதி தவறாத நடைபுடை பாவனையுடையவனை
இரவும் பகலும் சிந்திக்கத் தக்கது எது?
ஈசுவரனுடைய பாதாரவிந்தங்களே! சம்சாரமல்ல
கண்ணிருந்தும் குருடர் எவர்?
நாஸ்திகர்
எல்லாக் குணங்களையும் அழிப்பன எவை?

### புதிய புத்தகம்

[15-ம் பக்கத் தொடர்ச்சி]

பாழி' போன்றவற்றில் அவ்வப்போது தனித்தனியாகப் படித்து ரசித்த இலக்கிய ஆர்வலர்களுக்கு, அவரது கவிதைத்தொகுதி பெருமகிழ்வை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்பிரதி ஒன்றின் விலை 21 ரூபா (இலங்கைப் பெறுமதி) கிடைக்குமிடம்:- 'வசந்தம் புத்தகசாலை' மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சகாதேவன்

# ஜெருஸலம் விவகாரம்




பெரி. சண்முகநாதன்

இஸ்ரேலில் இதுவரை டெல்அவிவ்விலிருந்து அமெரிக்கத் தூதரகத்தை ஜெருஸலத்துக்கு மாற்ற எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் முழு அரபுலகத்துக்குமான ஒரு சவாலாகியுள்ளது.

1949-ம் ஆண்டு முதல் ஜெருஸலத்தை இஸ்ரேல் தனது தலைநகராகக் கருதிவந்துள்ளது என இஸ்ரேலியப் பிரதமர் ஷமீர் அண்மையில் 'டைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளபோழுதிலும், ஜெருஸலத்தை இஸ்ரேலின் தலைநகராக உலகின் பெரும்பாலான நாடுகள் குறிப்பாக அரபுநாடுகள் எப்போதுமே அங்கீகரித்திருக்கவில்லை.

# முஸ்லிம் உலகிற்கு ஒரு சவால்!

அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலத்துக்கு மாற்றவேண்டுமென்ற அமெரிக்கப்பாராளுமன்றத்தின் விருப்பமானது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எல்லா அரபுக்களும் அங்கீகரிக்க வேண்டுமென்ற இஸ்ரேலிய ஆதரவு சக்திகளின் வலியுறுத்தலையே பிரதிபலிக்கின்றது. இந்த முனைப்புக்கு ஆதாரமாகச் சில காலமாகச் செல்வாக்கு மிக்க யூத இனவெறி-ஆதரவுக் கோஷ்டிகள் வாஷிங்டனில் ஓர் இயக்கத்தினை ஆரம்பித்திருந்ததை யாவரும் அறிவர்.

ஆனால், இந்த முனைப்பு 'இஸ்ரேலின் விசுவாசமான நண்ப'ராகிய ஜனாதிபதி றேகனைப் பெரும் சங்கடத்துக்கு உள்ளாக்கியிருப்பதென்னவோ உண்மையே.

அமெரிக்கத் தூதரகத்தை ஜெருஸலத்துக்கு மாற்றுவதற்கான மசோதாவை ஆதரிப்பதன் மூலம் அரபு மற்றும் இஸ்லாமிய உலகில் பெரும் சீற்றப் புயலைக் கிளப்பி விடுவதா அல்லது அதை எதிர்ப்பதன் மூலம் எதிர்வரும் தேர்தலில் பல வாக்குகளை இழந்து ஜனாதிபதி பதவியில் தொடர்ந்திருக்கும் வாய்ப்பை இழப்பதா என்ற ஒரு சங்கடமான பிரச்சினைக்கு றேகன் முகம் கொடுத்த நிலையிலிருந்தார்.

அமெரிக்காவிலுள்ள இஸ்ரேலிய ஆதரவுச் சக்திகளுக்காகவும் அவற்றைக் கொண்டு லெபனானில் இஸ்ரேலின் நிலையைப் பலப்படுத்துவதற்காகவும் றேகன் பலப்பல உதவிகளைச் செய்துள்ளார். அப்படியிருந்தும் றேகனுக்கு இந்த இக்கட்டான நிலையை ஏற்படுத்துவதற்கு இச்சக்திகள் முனைந்ததேன்?

தேர்தலில் ஜனாதிபதி றேகனையும் அவருடைய குடியரசுக் கட்சியையும் தோற்கடித்து, ஜனநாயகக் கட்சிக்காரர் ஒருவரை ஜனாதிபதியாக்க வேண்டும் என்பதற்கான ஜனநாயகக் கட்சியின் முயற்சியே இது என வாஷிங்டன் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், தமது பதவியையும், கட்சியில் தமக்குள்ள அந்தஸ்தையும் மதிகொடுத்து, வெள்ளை மாளிகைக் கதவுகளை ஜனநாயகக் கட்சிக்காகத் திறந்துவிட றேகன் விரும்பமாட்டார்.

இருப்பினும், அமெரிக்கத் தூதரகத்தை ஜெருஸலத்துக்கு மாற்றுவதானது, அர்

(16ம் பக்கம் பார்க்க)

### விவாகரத்து

சீதனப் பிரச்சினையால்
தாலிக் கயிற்றுக்காய்
ஏங்கும் கன்னியரின்
அவலங்கள் தம்மை
கதைகதையாய்
எழுதினவர்—
நீதிமன்றத்தில்
விவாகரத்துக்கு
விண்ணப்பம்
கொடுத்துள்ளார்
சீதனப் பாக்கியை
தரவில்லை
என்பதுதான் அவரது
கோரிக்கை.

—ரஜனி


# விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க
நெல்விதைத்து 7 — 21 நாட்களுக்கிடையில்
பாவியுங்கள் "பாயர்" உற்பத்தியான
3. 4. டி. பி. ஏ. அடங்கிய
"சேர்கோப்பூர்"
450 மி. லி.—55 ரூபா 6.25 லீற்றர்—675 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி, கிடைச்சி எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்
எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்
(1) "ஹெடோனல் எம். 60%"
450 மி. லி.—55 ரூபா 2 லீற்றர்—240 ரூபா
(2) 'ஹெடோனல் எம். 40%"
450 மி. லி.—35 ரூபா
(3) "ஹெடோனல் D. 55%"
250 மி. லி.—55 ரூபா

## ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.
தொலைபேசி: 93563

உங்கள் விநியோகஸ்தர்கள் :-
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், இளைநொச்சி
குளோப் ரேடர்ஸ், வவுனியா.


### சமையல் குறிப்பு

## வாழைப்பூ அச்சாறு

தேவையானவை:

ஒரு வாழைப்பூ, வெங்காயம் 100 கிராம், மிளகாய் 5, கடுகு ஒரு மேசைக்கரண்டி. சீனி 2 மேசைக் கரண்டி, வினாகிரி ஒரு அவுன்ஸ், சிறிது மஞ்சள், அளவுக்குத் தகுந்த உப்பு, 5 செத்தல் மிளகாய்.

செய்முறை:- (1) வாழைப்பூவில் தேவையற்ற பகுதியை எடுத்து சிறிதாக அரிந்து சவர் எடுத்துப் பின்னர் நீர், மஞ்சள், உப்பு, விட்டு அவிக்கவும். பின்பு நன்கு நீரின்றிப் பிழிந்து எனாமல் பாத்திரத்தில் போட்டுவிடவும்

(2) கடுகு செத்தல் மிளகாய் இவற்றை வினாகிரியில் சிறிது நேரம் ஊறவிட்டு பின் அரைக்கவும், தண்ணீர் சேர்க்காமல் வினாகிரி விட்டு அரைக்கவும். அத்துடன் சிறிது மஞ்சளையும் சேர்க்கவும்

(3) வெங்காயம், மிளகாய் இவற்றைச் சிறிதாக அரிந்து வாழைப்பூக்கலவையில் சேர்க்கவும் அத்தோடு அரைத்த கடுகுக்கலவை சீனி, தேவையான அளவு உப்புச் சேர்த்து மர அகப்பையால் கிளறவும் மிகுதி வினாகிரியையும் சேர்க்கவும் வினாகிரி விரும்பாதவர்கள் எலுமிச்சம்புளி சேர்க்கலாம். தண்ணீர் படாத போத்தலில் போட்டுவைக்கவும். பழுதாகாமல் ஒரு வாரம் வரை வைத்திருக்கலாம். இடியப்பம், பாண் முதலியவற்றிற்கு இது சுவையானது

'பிலோராம்சந்த்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமாமுனிவர் கால்டுவெல் வழிவந்த தனிநாயகனார்

# தமிழியல் ஆய்வுக்கல்வியை உலக அரங்கிற்கு உயர்த்தியவர்

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம் கடந்த மாதம் அமரர் தனிநாயகம் அடிகளாருக்கு 'இலக்கிய முதுமுனைவர்' என்ற பட்டத்தினை அன்னார் ஆற்றிய தமிழ்ப்பணியின் நினைவஞ்சலியாக வழங்கியது. அப்போது பேராசிரியர் ம. சண்முகசுப்பிரமணியம் ஆற்றிய உரை.

''இலக்கிய முதுமுனைவர்'' என்ற மதிப்பார்ந்த பட்டத்தினை அமரரான அருள்தந்தை சேவியர் எஸ். தனிநாயக அடிகளார் அவர்களின் நினைவிற்கு அஞ்சலியாகப் படைக்குமாறு பணித்து வேண்டியமை எனது இனிய கடமையாகும்.

தமிழ்த்தாயின் தலைமைசால் புதல்வர்களாகத் திகழ்ந்த வீரமாமுனிவர் (Constantanus Beschi, G. U. போப், கால்டுவெல் ஆகிய கிறித்தவ சமய ஞானிகளின் வரிசை வழிவந்த தனிநாயக அடிகள் இலங்கையின் ஊர்காவற்றுறை என்ற ஊரிலே 1913-ஆம் ஆண்டு ஆகஸ்டு 2-ஆம்நாள் பிறந்தார். யாழ்ப்பாணம் புனிதபற்றிக்ஸ் கல்லூரியிலும், கொழும்பு நகரில் புனித பெர்னார்டு சமயப்பள்ளியிலும் பயின்று பின்னர் உரோமாபுரி சென்று மேலும் ஐந்தாண்டுகள் சமய ஞானக்கல்வி பெற்று, 1938ஆம் ஆண்டில் கத்தோலிக்கத் திருச்சபைப் பாதிரியாகப் பணி அமர்த்தப்பெற்றார்.

திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளம் புனித தெரசா உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியபின், 1945-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் மொழி, மற்றும் இலக்கியம் பயின்று முதுகலைப் பட்டம் பெற்றார். 1952-ம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகையில் ஈராண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தில் ''ஒப்பியல் கல்வி முறை'' என்பது பற்றி ஆய்வாளராக இருந்து ''முனைவர்'' பட்டம் பெற்றார். இத்தாலிய நாட்டில் இருந்தகாலத்தில் இலத்தீன், கிரேக்கம், இன்னும் ஐரோப்பிய மொழிகள் பலவற்றையும் பழுதறக் கற்று, கல்வி இயலில் முற்றிய புலமை பெற்றார். உலகமொழிகளில் கற்ற ஞானம் பெற்றதன் பயனாக ஒண்தமிழின் உயர்வினை உணர்ந்தார் இந்த உயர்வினை உலகறியச் செய்ய வேண்டுமென்பதில் ஊக்கமிக்க கொண்டார்.

## உலகத்தமிழ் ஆராய்ச்சிக்கழகம்

1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழ் மாநாட்டை முன்னின்று நடத்திய பெருமை இவருக்குண்டு. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாநாட்டினை நடத்திய ''உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தை''த் தோற்றுவித்தவர் தனிநாயக அடிகள் ஆவார். 1964-ஆம் ஆண்டில் புதுடில்லியில் தொடக்கப்பட்ட இக்கழகத்தின் தலைமைச்செயலாளராகப் பல ஆண்டுகள் அடிகள் பணியாற்றினார்.

இன்று ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள முக்கியமான பல்கலைக்கழகங்கள் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு இவைபற்றிய ஆய்வுகளை நடத்துகின்றன என்றால் அதற்குத் தனிநாயக அடிகளும் காரணம் ஆவார். பண்டைத் தமிழ் இலக்கியத்தின் பண்பாட்டு நலத்தினைப் பாரெங்கும் பரப்பிய அடிகள், தமிழியல் ஆய்வுக் கல்வியை உலக அரங்கிற்கு உயர்த்திப்பெருமை பெற்றார்.

தமிழ்ப் பண்பாட்டின் தலைமையினைச் சாற்றும் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மணிமொழியினை உலக அரங்குகளில் ஒலிக்கச்செய்தார்.

1954-ம் ஆண்டு இறுதியில் ''தமிழ்ப்பண்பாட்டுக்கழகம்'' (Academy of Tamil Culture) ஒன்றைச் சென்னையில் நிறுவி அதன் வழி ''தமிழ்ப்பண்பாடு'' (Tamil Culture) என்ற காலாண்டு இதழை வெளியிட்டு வந்தார். ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் சென்னையில் ''உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்'' அமைப்பதற்கு அடிகோலினார். மேலும் 'ஆய்வு' (Journal of Tamil Studres) என்ற இதழின் பதிப்பாசிரியராகத் தொடர்ந்து பணியாற்றினார். இவ்வாறு தனிநாயக அடிகள் தமிழியல் ஆய்வுக்கு உலகளாவிய நோக்குடன் உயர்ந்த தொண்டாற்றினார்.

கோலாலம்பூர் உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில், ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!'' என்ற திருமந்திர வரிகளைத் தீர்க்கமாக முழக்கிய தனிநாயகரின் உயிரொலி 1980-ம் ஆண்டு செப்டம்பர் 1ம் நாளன்று ஒடுங்கியது. இன்றைய மேலை நாட்டு ஆய்வுமுறையில் தமிழை ஆய்ந்த அதன் பெருமையினை உலகறியச் செய்த உத்தமரை நாம் மறப்பதற்கில்லை.

**பேராசிரியர் ம. சண்முகசுப்பிரமணியம்**
வளர்தமிழ்ப்புலத் தலைவர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# தென்மராட்சியின் கற்பகதரு கல்லூரி அதிபர்



வெற்றிவேலு

முப்பத்தைந்து வருடக் கல்விச் சேவையின் விளைவாகத் தனது அருளாட்சியால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைப் புகழ்பெறச் செய்த கல்விமான் அதிபர் வெற்றிவேலு நாளைமுதல் சேவையினின்றும் ஓய்வு பெறுகின்றார்.

உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரியான இவர் 1950 ஜூன் மாதம் உதவி ஆசிரியராக இக்கல்லூரியில் பதவியேற்றபோது சில வகுப்பறைக் கொட்டில்களும் இரண்டொரு மண்டபங்களுமே இருந்தன. விஞ்ஞான ஆய்வு கூடங்கள் உபகரணங்கள் அக்காலத்தில் இல்லாது. இதனால், சாவகச்சேரித் தொகுதி மாணவர்கள் உயர் கல்விக்காக யாழ். நகர் கல்லூரிகளை நாடிப்படையெடுத்தனர். வசதியற்றவர்கள் இங்கு படித்தனர். சிறந்த செயற்றிறன் மிக்க வெற்றிவேலு அவர்கள் பழைய மாணவர் அணியைத் திரட்டினார். கால்நூற்றாண்டு காலம் அவரும் தானும் இணைச் செயலாளராக இயங்கி பாரிய ஆய்வுகூடங்களை எழுப்பினர். அதிபருக்குப் பக்கபலமாக நின்று கல்விச்சேவையை இதர ஆசிரியர்களுடன் கோஷ்டி மனப்பான்மையுடன் ஒரு தவமாக, அனைவரும் மேற்கொண்டனர். சகல இலாகாவிலும் இதனால் சிறந்த பெறுபேறு உயர்தர மாணவர்கள் சட்டக் கல்லூரியின் புகழ் உயர்ந்தது. படிப்படியாக கல்லூரி தரமுயர்ந்து ஈற்றில் முதற்றரத்தையும் பெற்றது. மேற்கல்வியை நாடி யாழ்ப்பாணம் ஓடியவர்களும் பிறஊர் மாணவர்களும் இந்த கல்லூரியைச் சரணடைந்தனர்.

இலண்டன் சர்வகலாசாலையின் பட்டப் பின்படிப்பைப் பூர்த்தி செய்த அதிபர் வெற்றிவேலு எஞ்ஞான்றும் விஞ்ஞானமே கல்வியின் உயிர்நாடி என்பதை உணர்ந்து, தானே ஆக்கபூர்வமான முறையில் ஆய்வு கூடத்தைப்பயன் படுத்தி மாணவர்களைப் பூரண அறிவு பெறவைத்தார். அதிலும் வெற்றிகண்டார்.

அகநோக்குத் திறனும், தன்னம்பிக்கையும், தளராத கொள்கைப் பிடிப்பும் கொண்ட இவரை துணை அதிபர் பதவிதாடி ஓடி 1968ல் இவரை வந்தடைந்தது.

திட்டமிட்டுச் செயலாற்றும் இவர், பல மாடிக்கட்டிடங்களை அரசின் உதவியுடனும் தனது விருப்பிகள் பழைய மாணவர்களின் துணைமூலம் பெரு நிதியையும் பெற்று நிறுவினார். இன்றைய கல்லூரியின் கம்பீரதோற்றம் அதிபரின் ஆளுமைக்கோர் அழியாச்சிலை.

மாணவர் தொகை 2240 ஆக பொலிவுற்றது. இவர் அதிபராக 1970 முதல் 'தவிசு' வீற்றிருந்து, அருளாட்சி புரிந்த காலம் கல்லூரி வரலாற்றேட்டில் அழியாத பொற்காலம்.

பலவசதி படைத்தவர்களின் 'துணையுடன் பல புலமைப்பரிசில்களை நிறுவி வட்டிப்பணத்தை விருந்தோ வழங்கினார் இதனால் பல வறிய மாணவர்கள் வைத்திய கலாநிதிகளாக, பொறியியலாளர்களாக உருப்பட்டனர். கல்லூரியின் கீர்த்தி ஓங்கியது.

இக் கல்லூரி மாணவர்களுக்கு அகில முன்னணியிடத்தைப் பிரமதி, உலக அறிஞர், ஒரு ''தவிழுத்து...'' டிக் கொடுத்த பெருமை, வெற்றி வீரனாகிய இக் கரும யோகியையே சாரும். இவரின் உள்ளத்துநேர்மையும் திடசித்தமையும், நீதி திறம்பாத மன உரமும் மாணவரையும், ஆசிரியர்களையும், பெற்றோரையும் மலைக்க வைத்தன. ஆகவே இவர் சொற்கள், முடிவுகள் எவையும் வேதவாக்காக அனைவராலும் ஏற்கப்பட்டன. சாவகச்சேரி இந்துக் கல்லூரியென்று எடுத்த பிறப்பு அதிபர் வெற்றிவேலு.

சாரணியம், விளையாட்டுத் துறை இப்படி அனைத்திலும் மாணவர்கள் பெருஞ்சாதனைகள் புரிந்தனர். வெற்றிமேல் வெற்றிகண்டனர்.

இன்றைய ஒரு ஆங்கிலப்படி தென்மராட்சியில் வீட்டுக்கொரு டாக்டரும், பொறியியலாளரும், விஞ்ஞான ஆசிரியரும், சான்றோரும் பொலிவது இக்கல்லூரியின் அமரத்தே சேவையாலும் என்பது ஓர் முடிந்த பெருண்மை.

தென்மராட்சியின் 'கற்பக தரு' வாக சாவகச்சேரி இந்துவை மிளிரவைத்த அதிபர் வெற்றிவேலுவின் அன்புக்கும், அவரின் துணைவியார் சக ஆசிரியை திருமதி நாகேசுவரி அம்மாவின் பண்புக்கும் இவர்கள் இருவரையும் வாழ்த்தி ... வாழ்த்துவோமாக.

--ஆர். ரீ. எஸ்.

# தீர்ப்பு

வியாபாரி ஒருவன், வழியில் இருட்டிவிட்டபடியால் சத்திரத்தில் வந்து தங்கினான். இந்த நேரத்தில் விடுதிக்காரன் அவ்வியாபாரியிடம் இரவுச் சாப்பாடு ஏதும் ஆயத்தம் பண்ண வேண்டுமா எனக் கேட்க,

''நான் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன்'' என்று வியாபாரி கூறினான்.

வியாபாரி சாப்பிட உட்கார்ந்தபோது, சுற்று விடுதியில் உள்ளவர்களுக்காக உணவு ஆயத்தம் பண்ண விடுதிக்காரன் தொடங்கினான். வியாபாரிக்கோ மாமிசப் பொரியல் மணம் மூக்கைத் துளைத்தது. உடனே கட்டுச் சோற்றுடன் விடுதிக்காரன் பக்கத்தில் அமர்ந்து பொரியல் மணத்தை நுகர்ந்துகொண்டு சாப்பிட்டான். சாப்பிட்டுவிட்டு எழும்பும்போது விடுதிக்காரன் வியாபாரியின் கையைப் பிடித்துக் கொண்டான். வியாபாரிஏதும் புரியாமல் 'ஏன்' என்று கேட்டான். விடுதிக்காரன் ''நீ பொரியல் மணத்தோடு சாப்பிட்டதற்குப் பணம் வேண்டும்'' என்றான்.

வியாபாரி 'முடியாது' என மறுத்தான். இருவருக்கும் வாக்குவாதம் முற்றி அருகிலுள்ள நீதிபதியிடம் சென்றார்கள். நீதிபதி ''நடந்தது என்னவென்று கேட்டார். ''ஐயா! நான் இவரின் விடுதியில் தங்கினேன். இவர் என்னிடம் இரவு சாப்பாட்டிற்கு உணவு வேண்டுமா எனக் கேட்டார். நான் கட்டுச்சோறு கொண்டுவந்துள்ளேன் எனக்கு வேண்டாம் என்றேன். சிறிது நேரத்தில் இவர் மற்றவர்களுக்கு உணவு தயாரித்துக் கொண்டிருந்தார் அப்போது இவர் தயாரித்த மாமிசப் பொரியல் மணத்தோடு அவர் அருகில் இருந்து சோறு சாப்பிட்டேன். அதற்கு பணம் கேட்கிறார்'' என்றான் வியாபாரி.

''இவர் சொன்னது அனைத்தும் உண்மையா?'' என நீதிபதி விடுதிக்காரரிடம் கேட்டார். அவனும் ''ஆம் ஐயா'' என்றான்.

நீதிபதி உடனே வியாபாரியிடம் ஒரு ரூபா பணம் தரும்படி கேட்டு, அருகிலிருந்த காவலாளியை அழைத்து ''இந்த ஒரு ரூபா நாணயத்தை விடுதிக்காரனிடம் கொடுத்து மணந்துவிட்டுத் தரும்படி கொடு'' எனக் கூறினார்.

காவலாளியும் நாணயத்தை விடுதிக்காரனின் மூக்கில் வைத்து மணந்துவிட்டுத் தாரும் என்றான். விடுதிக்காரன் தன் செயலை எண்ணி வெட்கித் தலை குனிந்தான்.

செ. உருத்திரன்

## சிறுவர்நாம்

★ சினக் கதை

### ஈட்டியும் கேடயமும்

முன்னொரு காலத்தில் ஒருவன் ஈட்டி கேடயம் இரண்டையும் விற்று வந்தான். ஈட்டியை விற்கும்போது அவன் தன் ஈட்டியை உயர்த்திப் பிடித்தபடி ''என் ஈட்டி எந்தக் கேடயத்தையும் குத்திக் கிழித்துவிடும் அவ்வளவு கூரானது'' என்று கத்துவான். தன் கேடயத்தைக் காட்டி இந்தக் கேடயத்தை எந்த ஈட்டியாலுமே பிளந்துவிட முடியாது என்பான். இவன் இப்படிக் கூறி விற்பதைக் கண்ட சிலர் ''அது சரி, உன் அற்புதமான ஈட்டியால் உன் பலமான கேடயத்தைக் குத்தினால் என்ன நடக்கும்?'' என்று கேட்டனர்.

★ ராணி சின்னத்தம்பி

# போற்றி! போற்றி!

குன்றத்தை வில்லாகக் குனித்தாய் போற்றி
கூடாதார் புரமெய்த கோவே போற்றி
மன்றத்தே நின்றாடும் கண்ணா போற்றி
மாறுமல் அண்டங்கள் இயக்குவாய்நீ
கொன்றைத்தார் குளிர்சடையாய் அழகா போற்றி
கோடானத் திருப்பாதம் உறவாய்க் கொண்டே
சென்றாற்றும் வினைதீர்த்த சிவனே போற்றி
சிறிகல ரோகணரே போற்றி போற்றி!

புலவர் ஜோ. கனகசபாபதி.

★ திருநெல்வேலி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ரதோற்சவம் இன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

